நாட்டுப்புற இலக்கியம் :

# ஈனமுத்துப் பாண்டியன் கதை

(வில்லுப் பாட்டு)


பதிப்பாசிரியர்கள் :

மு. சண்முகம் பிள்ளை,
தமிழ் விரிவுரையாளர்,
திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி

சு. சண்முகசுந்தரம், எம்.ஏ.,
ஆராய்ச்சி மாணவர்,
தமிழ்த்துறை.


[தமிழ்த்துறை வெளியிடும் 'தமிழாய்வு'
மூன்றும் தொகுதியிலிருந்து எடுத்து வெளியிடப்பட்டது]


சென்னைப் பல்கலைக் கழகம்

1974

நாட்டுப்புற இலக்கியம் :

# ஈனமுத்துப் பாண்டியன் கதை

பதிப்பாசிரியர்கள் :
மு. சண்முகம் பிள்ளை,
தமிழ் விரிவுரையாளர்,
திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி.

சு. சண்முகசுந்தரம், எம். ஏ.,
ஆராய்ச்சி மாணவர்,
தமிழ்த்துறை.

சென்னைப் பல்கலைக் கழகம்

1974

முதற் பதிப்பு: 1974.

சென்னைப் பல்கலைக் கழகத்
தமிழ்த்துறை வெளியிடும்

தமிழாய்வு

மூன்றும் தொகுதியில் இணைக்கப்பெற்ற
வில்லுப் பாட்டு

# முன்னுரை

## கதைப் பாட்டு

ஈனமுத்துப் பாண்டியன் கதை நாட்டுப்புறக் கதைப் பாடல்களுள் ஒன்று. பெரும்பாலான கதைப் பாடல்களும் அம்மானைப் பாடல் முறையிலேயே அமைந்துள்ளன. அல்லி அரசாணிமாலை, தேசிங்கு ராசன் கதை, இராமப்பய்யன் அம்மானை போன்றவற்றின் நடையி லேயே இவை காணப்படுகின்றன. இப் பாடல்கள் தனிமையில் பாடி மகிழ்வதற்கும், பலர் கூடியிருந்து வாசிக்கக் கேட்டு மகிழ்வதற்கும் ஏற்றவை. இவ்வகை நூல்களுள் முற்றும் பாடலாய் அமைந்தனவும் இடையிடையே கதைத் தொடர்பான விருத்தம் முதலிய வேறு வகைப் பாடலோ, உரைநடையோ அமைந்து காணப்படுவனவும் ஆக இரு வகையுண்டு. இவற்றுள், பலவற்றை உடுக்கை முதலிய இசைக் கருவி களுடன் பாடுதலும், வில்லிசையில் பலர் கூடி இசைத்தலும் வழக்க மாகும். வில்லிசைப் பாடல் வகையில் அடங்குவதே இங்கு வெளியிடப் பெறும் ஈனமுத்துப் பாண்டியன் கதைப் பாட்டு.

## வில்லுப் பாட்டு

வில்லுப் பாட்டு எனப்படும் வில்லிசைப் பாடல்கள் சிறு தெய்வக் கொண்டாட்டங்களில் சிறப்பிடம் பெறுகின்றன. குறித்த தொரு தெய்வத்தை முன்னிட்டு வழங்கும் சிறப்புப் பாடல்கள் அந்தந்தத் தெய்வங்களின் விழாக்களில் பாடப்பெறும். இவ்வகைத் தனிப்பாட்டு தெய்வங்களின் ஆவேசத்திற்காகப் பெரிதும் பயன் படுத்தப்படுவதாம். ஏனைய நேரங்களில் மக்களுக்கு எழுச்சியும் இன்பமும் நல்லறிவும் ஊட்டத்தக்க வகையில் அமைந்த புராணக் கதை களிலான வில்லுப் பாட்டுகளை இசைப்பார்கள். சுடலைமாடன் கதை, இசக்கியம்மன் கதை, ஐயனார் கதை எனப்படும் சாத்தா கதை. சங்கிலி பூதத்தார் கதை, முத்தாலம்மன் கதை, நல்லதங்காள் கதை, கட்ட பொம்மு கதை போன்றவை சிறப்பாகப் பாடப்படும் வில்லுப் பாடல் களாம். சிறப்பாக அந்தந்த பகுதிகளில் வழங்கும் வீரபெருமக்களின் வரலாறுகளும் இடம்பெறும். ஆனால், இப்பொழுது காலத்துக்கு ஏற்ற வகையில் நாட்டுப் பெருமக்களின் வரலாறுகளையும் வில்லிசையில் அமைத்துப் பாடி வருகின்றனர்.

## வில்லுப் பாட்டின் தனி இயல்பு

கதைப் பாடல்கள் அனைத்தும் வில்லிசைக்கேற்ப அமைவன அல்ல. வில்லிசைக்கான இசை அமைதியும், தாளக் கோப்பும் உடைய பாடல்கள், சிறுசிறு தொடர்களில் அமைந்த பாடல்கள், மீண்டும் மீண்டும் இசைத்து உணர்ச்சியூட்டும் பாடல்கள்தாம் பெரும்பாலும்

விரும்பப்படுகின்றன. ஆகவே, எல்லாக் கதைப் பாடல்களையும் வில்லுப் பாடல்கள் என்று சொல்லுவதற்கில்லை. பாடல்களை ஓசையாலும் அடியளவு முதலியவற்ருலும் பெயரிட்டு வழங்குவதே மரபு. அம்மானைப் பாடல்கள் மெட்டில் வளர்ந்த நிலையே வில்லுப் பாட்டுகள்.

இந்த யாப்பு மரபு எத்தனையோ வகையில் வளர்ச்சியுற்று இசைக் கலைக்கும், இசைக் கருவிகளுக்கும் ஏற்ற வகையில் பல்வேறு வடிவங் களையும் ஒலி அமைப்புகளையும் தாள நிலைகளையும் பெற்றுக் காலந் தோறும் வளர்ந்து வந்துள்ளன. இவ் வளர்ச்சியில் சிந்து கும்மி போன்ற எளிய இசைப் பாடல்கள் பின்னாளில் பெரு வழக்குற்றன. இத்தகைய இசை அமைதியோடு பழைய ஆசிரியத்தின் மாற்று வடிவம்போல் இவை வளர்ச்சியுற்றுள்ளன.

## பெயர் வரலாறு

பாடலின் இசை அமைதியைப் பொறுத்தும், பாட்டை இசைப்பவர் களைப் பொறுத்தும், அவர்கள் இசைக்கும் கருவிகளை மையமாக வைத்தும் பாடல்களுக்குப் பெயர் சூட்டுவதுண்டு. வெண்பா, அகவல் கலிப்பா முதலிய பா வகைகள் எல்லாம் ஓசையமைதியைக்கொண்டு பெயர் பெற்றவையே. தாய்மார்கள் பாடி மகிழ்வதற்காகவே பாடப் பெற்றவை அல்லி அரசாணிமாலை முதலிய அம்மானைப் பாடல்கள். அம்மனை என்பதற்குத் தாய் என்பது பொருள். அதுவே ஈறு நீண்டு அம்மானை என வழங்கப்படுவதுண்டு.[1] கோடங்கி பாட்டு, இராப் பாடி பாட்டு, கணியான் பாட்டு, மாட்டுக்காரன் பாட்டு என்னும் வழக்குகள் பாடுபவரைக்கொண்டு பிறந்தவை. கருவிகளினல் பெயர் பெற்ற பாடல்கள் உடுக்கடிப் பாட்டு, வில்லுப் பாட்டு, கும்மிப் பாட்டு, கோலாட்டுப் பாட்டு போன்றவைகள். வில் என்னும் இசைக் கருவியை முதன்மையாக வைத்துப் பாடப்படும் பாடலே வில்லுப் பாட்டாகும்.

## இன்றைய நிலை

திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கிராமதேவதை களின் கொடை விழாக்களில் இன்றும் இப் பாடல் வகை வழக்கிலுள்

---

1. புகழேந்திப் புலவர் சிறையில் இருந்த காலத்தில் அச் சிறைக் கூடத்தின் அண்மையிலுள்ள கிணற்றில் நீரெடுக்க வந்த பெண்களின் பொருட்டு. அல்லி அரசாணி மாலை போன்றவற்றை பாடியதாகச் சொல்வது செவிவழிச் செய்தி. ‘இராமாயண நங்கைப் பாட்டு’ என்னும் ஒரு நூல் அம்மானை முறையில் அமைந்ததே. இதில் நங்கைப் பாட்டு என்று சுட்டியிருப்பதும் கவனிக்கத்தக்கது. அல்லி அரசாணிமாலை முதலிய அம்மானைப் பாடல்களை ‘மாதர் மஞ்சரி’ என்னும் வரிசையில் சரவண பவானந்தம் பிள்ளை வெளியிட்டிருப்பதும் ஈண்டுக் கவனித்தற் குரியது.

ளது. இதைப் பாடுபவர்களும் அங்கே பலராய் உள்ளனர். ஆண்களே யன்றிப் பெண்களும் இந் நிகழ்ச்சியை நடத்துகின்றனர். சென்னை, திருச்சி முதலிய வானொலி நிலையத்தாரும் நாட்டுப்புறப் பாடல் நிகழ்ச்சி களுள் ஒன்றாக வில்லுப் பாடல்களையும் ஒலிபரப்பி வருகின்றனர். இதனால், தமிழகத்தின் பிற பகுதிகளிலும் வில்லுப் பாட்டு சிறப்புற விளங்குகிறது. கல்வி நிலையங்களில்கூட மாணவர்கள் தங்கள் விழா நாள்களில் வில்லுப்பாட்டுப் பாடுதலையும் அங்கங்கே காணலாம். இவ்வாறு ஒரு பகுதியில் மிகுதியும் போற்றப்பட்டு வருகிற வில்லுப் பாட்டு தமிழகம் முழுவதும் பரவி எல்லோரும் இனிது கேட்டு மகிழும் நல்லிசையாக இன்று விளங்கி வருகின்றது.

### தோற்றம்

வில்லுப் பாட்டு மரபு எவ்வாறு தோன்றியது எனச் சற்றுப் பார்ப்போம். பண்டை மனிதர்களின் வேட்டைத் தொழிலுக்கும் போர்த்தொழிலுக்கும் பயன்பட்ட முக்கியமான கருவி வில். இக் கருவியில் மணி கோத்திருப்பது வழக்கமென்பதைக் கம்ப இராமா யணம் போன்ற காவியங்கள் வாயிலாய் அறிந்துகொள்ளலாம். இராமனுடைய வில் மணி ஓசை ஒலிக்கேற்ப யானை முதலிய எதிரி களின் படைகள் வீழ்ந்தன என்பதைக் கம்பர்,

> ‘கடுமணி நெடியவன் வெஞ்சிலை
> கணகண கணகண எனும் தொறும்’
>
> (யுத்த : மூலபல : 214)

என்று குறிப்பிடுகின்றார். இங்ஙனம் வெற்றி பெற்ற வீரர்கள் மகிழ்ச்சியால் வில் நாண், வில்மணி ஒலிக்கேற்ப மகிழ்ச்சிக் கூத்து ஆடினர். இந்த வில் மணி ஓசை மகிழ்ச்சிக் கூத்தாட்டத்திற்கேற்ப அமைந்திருப்பதுகொண்டு வீரர் வழிபாட்டிலும் வில்லை இயக்கி ஆடிப் பாடும் மரபு தோன்றியிருக்கலாம். மற்றும் இது பற்றிய இன்னொரு கருத்தும் உண்டு. அதாவது, வேட்டைத் தொழிலில் ஈடுபட்டு வீர வாழ்வு நடத்திய மனிதன், ஓய்வு நேரங்களில் இளைப்பாறும்போது வில் மணி ஓசைக்கேற்பப் பாடியிருக்கலாம் என்பதே. எவ்வாறா யினும் வில்லிசை எழுப்பிப்பாடும் பாடல் வீரர்களின் எழுச்சிக்காகவே முதன்முதலில் தோன்றியிருத்தல் வேண்டும். பின்னர், அது வீரர் வழிபாட்டிற்கும் பயன்பட்டிருக்க வேண்டும் எனக் கருதுவது இயல்பே.

### வில்லுப்பாட்டுக் கருவிகள்

வில் பாட்டிற்குரிய முதன்மைக் கருவி வில்லே. இந்த வில் கூந்தற் பனையின் அடிமரத்தால் செய்யப்படுவதாகும். இதன் இரு முனை களிலும் வெண்கலக் குப்பிகள் பொருத்தப்பட்டிருக்கும். மாட்டுத்தோல் வடத்தை முறுக்கி நாணாகப் பயன்படுத்துவர்; வில்லில் பரல்களோடு கூடிய ஒலிக்கும் மணிகள் பொருத்தப்பட்டிருக்கும். வில்லிசை தொடங்கும்போது மட்டுமே வில் வளைத்துக் கட்டப்படும். வில்லின்

நடுப் பாகத்தைப் பெரிய மண்குடத்தின் கழுத்திலே பொருந்தும்படி வைத்துக் கட்டுவர். அந்த மண்குடம் வைக்கோலால் முறுக்கப்பட்ட புரிமணைமேல் வைக்கப்பட்டிருக்கும். வில்லை அடித்து ஒலி எழுப்ப இரு வீசுகோல்கள் பயன்படும். அந்த வீசு கோல்களிலும் வெண்கல மணிகள் பொருத்தப்பட்டிருக்கும், இதற்குத் துணையான இசைக் கருவி களாய் அமைபவை உடுக்கை, வெண்கலத்தாளம், கட்டை, குடமட்டை ஆகியவையே. இப்பொழுது ஆர்மோனியமும் பயன்படுத்தப்படு கிறது.

### கருவிகளை இயக்கும் வகை

வில்லடிக்கும் தலைமைப் பாடகராகிய புலவரே, வீசுகோலைக் கையில்கொண்டு இசைக்கேற்ப வில்நாணை அடித்து ஒலி எழுப்புவார். இவரை அண்ணாவி, வில்லுக்காரர் என்றும் அழைப்பர். இதற்கு ஏற்பவே ஏனைய கருவிகளும் ஒத்து இசைக்கப்படும். குடவாயை மட்டையால் அடிக்கும் ஒருவகைத் திறத்தாலேயே ‘பம்பம்’ எனத் தனி ஓசை எழுப்பப்படும். வலக்கையால் குடத்தை அடித்துக் கொண்டே இடக்கை விரலிடுக்கில் பிடித்துள்ள சொட்டிக் கட்டையால் குடத்தைக் கொட்டியும் ஒலி எழுப்புவார். வெண்கலத் தாளமும், கட்டைகளும், உடுக்கையும் கையினால் இயக்கப்படுபவையே.

### பாடும் முறை

வில்லுப் பாட்டுப் புலவர் வில்லின் முன் நடுநாயகமாய் அமர்ந்து வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை நடத்துவார். தலைப்பாகையுடன் கம்பீர மாய் அவர் அமர்ந்து நிகழ்ச்சியை நடத்தும் பாங்கும் சிறப்பாக இருக்கும். புலவர் பாடுகின்ற முறையும், வீசுகோலை வீசிச் சுழற்றி வில் நாணை அடிக்கின்ற பாங்கும், அவர் தம் அங்க அசைவு மெய்ப்பாடு களும், சுற்றியிருந்து கேட்போரைக் கவரத்தக்க வண்ணம் அமைந் திருக்கும். வில்லின் தரை சார்ந்த பக்கத்தில், அதாவது வில்லின் இடப்புறம் புலவரும், அவருக்கு வலப்புறம் குடத்தை இயக்குபவரும் அமர்ந்திருப்பர்; ஏனையோரும் அடுத்துப் பின் பக்கம் சூழ்ந்திருப்பர். பாடல்களைப் புலவர் பாடும்போது ஏனையோர் இசைக்கருவிகளை இயக்கியும் அவர் பாடலை வழிமொழிந்து பாடியும் சுவையூட்டுவர்.

புலவர் தம் பாடலைத் தொடங்குகின்றபொழுது, ‘தந்தினத்தோம் என்று சொல்லியே வில்லினில் பாட’ என்று தொடங்கி, கணபதி, கலை மகள் முதலிய தெய்வங்களை வணங்கும் பாடலை முதலில் இசைப்பார். வில்லுப்பாட்டின்இசை எவ்வாறு அமையும் என்பதை, ‘தந்தினத்தோம்’ என்ற சந்தக் குறிப்பே காட்டும்.

வில்லுப்பாடல் முழுவதும் குறித்ததொரு தெய்வத்தைப் பற்றியே இருப்பதில்லை. எந்தக் கோயிலில் பாடுகிறாரோ அந்தக் கோயில் தெய்வத்தைப் பற்றிய பாட்டே ஆவேசகாலத்தில் பாடப்படுவதாய் இருக்கும். ஏனைய காலங்களில் வீரர் கதைகளும் புராண இதிகாசக்

கதைகளும் நாட்டுத் தலைவரின் வரலாறுகளும் பாடப்படுவதுண்டு. கதைகள் முழுவதும் பாடலாகவே அமைவதில்லை. ஒருவகையில் இந் நிகழ்ச்சியை அரிகதை சொல்லும் பாகவதர்களின் நிகழ்ச்சியோடு ஒப்பிடலாம். எப்படிப் பாகவதர் உரையும் பாட்டுமாகத் தம் கதையை நடத்திச்செல்லுகிறாரோ அந்த வகையில்தான் வில்லுப் பாட்டு நிகழ்ச்சி களும் நடைபெறுகின்றன. முக்கிய நிகழ்ச்சிகளைப் பாடலாகவும் இடை யிடையே தொடர்புக்காகக் கதை சொல்லும் முறையில் உரைகளும் இடம் பெறுவதுண்டு.

*பொது மரபுகள்*

புலவர் பாடும்போது ஏனையோர் அப் பாட்டை திரும்பிப் பாடுதலும், பாடற்பகுதியின் பின்தொடர்களை மட்டும் மீண்டும் பாடுதலும் உண்டு. தொடர்களை மீண்டும் அழுத்திப் பாடுகின்றபோது பாடலின் நயம் கேட்போருக்கு நன்கு புலப்படும். புலவர் உரை களின் இடையிடையே அதற்கு ஏற்றாற்போல ஆமா, ஓஹோ, ஆஹா என்று உணர்ச்சிக் குறிப்புகளை வெளிப்படுத்துவர். தாள லயங்களும் மெய்ப்பாடுகளும் மேலும் மேலும் உணர்ச்சியை வெளிப்படுத்தும். கதை சொல்லும்போது இடையிடையே பொருத்தமான சிறு வினாக் களைப் பின்னுள்ளோர் எழுப்புதலும், அதற்கு விடை சொல்லுகின்ற பாங்கில் புலவர் உரைப்பதும் கதை விளக்கத்திற்குத் துணைபுரியும்.

பெரும்பாலான பாடல்களின் தொடக்கத்தில் நாட்டு வளப்பம் பாடுவது குறிப்பிடத் தக்கது. 'நாடு நல்லோ நல்ல நாடு, நாவலர்கள் புகழும் நாடு' என்று தொடங்கி நிலவளம் நீர்வளம் போன்றவற்றையும் ஏத்திப்பாடுவார். 'நாடான நாடதிலே நல்லவள நாடதிலே' என்று தொடங்கிப் பாடுவதும் உண்டு. நகரங்களையும் ஊர்களையும் குறிக் கின்றபோது 'தேனிருநது மழை பொழியும்' என்று புகழுவது பொது மரபாய்க் காணப்படுகின்றது. இந்த ஈனமுத்து கதைப் பாட்டிலும் தேனிருந்து மழைபொழியும் தெற்குவள்ளியூர் தலமதிலே' என்று குறிப்பிடப்படுவதைக் காணலாம்.

தெய்வ ஆவேசம் உண்டாவதற்காக அத் தெய்வ வரவு குறித்துப் பாடப்படுகின்ற பாடலை 'வரத்துப்பாட்டு' என்பர். தெய்வம் எங்கிருந்து எப்பொழுது எவ்வெவ்வாறெல்லாம் வந்தது என்றும் அதன் திருவிளையாடல்கள் இன்ன என்றும், அத் தலத்தில் வந்து கோயில் கொண்டுள்ள மகிமையும் பிறவும் மிக உருக்கமாகவும் விளக்கமாகவும் பாடப்படுவதுண்டு.

வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை முடிக்கின்ற தருணத்தில் பாடுகின்ற பாடலை வாழ்த்துப்பாட்டு, வாழ்த்திப் பாடல், வாழி பாடல் என்றும் கூறுவர். நாட்டையும் ஊரையும், ஊர்ப் பெருமக்களையும், கோயிலுக் குச் சிறப்புச் செய்யக் காரணமாய் இருந்தவர்களையும் 'வாழ்க வாழ்க' என வாழ்த்திச் சிறப்பிப்பர். வில்லுப்பாட்டுப் புலவர்க்கு வெகுமதி

யளித்துச் சிறப்புச் செய்கின்றவர்களையும் தனித்தனியாகக் குறிப்பிட்டு வாழி பாடுவர். நிகழ்ச்சியை முற்றுவிக்கும்போது, 'வாழி வாழி, வாழி வாழி, வாழி வாழியே!' என்று இசைப்பர்.

## வில்லுப் பாட்டு இலக்கியம்

வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும், அதற்கான பாடல்களும் ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பே தொடங்கிவிட்டன என்று கொள்ளலாம். பதினேழாம் நூற்றாண்டு இலக்கியமாகிய முக்கூடற்பள்ளு நூலாசிரியர் பேய்க்கொடையையும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியையும் குறிப்பிட்டுள்ளார். முக்கூடற்பள்ளனின் இரு மனைவியருள் மூத்தவளாகிய முக்கூடற்பள்ளி, அவனுடைய செயல்களைப் பண்ணைக்காரரிடம் முறையிடும்போது பேய்க்கொடைக்கும் வில்லுப்பாட்டுக்குமாக அவன் பொருள்களை மட்டின்றிச் செலவிடுவதாகச் சொல்லுகிறாள்.

'வரத்தினை மீறும்—செலவுக்குத்
தரித்திரம் ஏறும்—பேய்க்கொடை
மட்டுக்கட்டு இல்லான்—கூத்துக்கும்
கொட்டுக்கும் நல்லான்
உரத்திடும் காளை—சுழியன்
நரைத்தலை மோழை—புதியவள்
ஊட்டுக்குக் குறித்தான்—வில்லடிப்
பாட்டுக்குப் பொறித்தான்.' (86)

இதனால் பேய்க்கொடையும் வில்லுப்பாட்டும் அந்நாளில் கிராம மக்களிடையே, சிறப்பாக உழவரிடையே பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்தமை புலனாகும். பேய்க்கொடைபோலவே காளிதேவிக்குச் செய்யப்பெறும் சிறப்பினைக் 'காளியூட்டு' என்பர். ஊட்டென்பது உணவு. காளிக்காகப் படைக்கப்படும் படையல் 'காளி ஊட்டு' ஆகும். காளியூட்டு விழாவில் காளிக்கு நாற்சந்தியில் மதுக்குடம் வைத்து வழிபடுவதும், அப்போது அம் மது பொங்கி வழியும் நிகழ்ச்சியும் இடம் பெறுவதுண்டு.

'தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச் சிற்றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ?
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக்கு ஊட்டாம்காண் சாழலோ!'
(திருவா. திருச்சாழல். 14)

என்னும் மாணிக்கவாசகரின் திருவாக்கில் காளியூட்டுப்பற்றிய குறிப்பு வருகின்றது. சிலப்பதிகாரத்திலே கொற்றவை வழிபாடு வேட்டுவ வரியில் சிறப்பாய் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. காளி, பேய் முதலான சிறு தெய்வ வழிபாடுகள் பற்றிய குறிப்புகள் சங்கப் பாடல்களில் அங்கங்கே இடம் பெற்றுள்ளன. ஆகவே, சிறு தெய்வ

வழிபாட்டையொட்டி அதற்கான இசையும் கூத்தும் பாட்டும் எழுந்திருத்தல் இயல்பே. முக்கூடற்பள்ளின் காலமான பதினேழாம் நூற்றுண்டிற்கு முற்பட்டே 'வில்லுப் பாட்டு' நாட்டில் பெருவழக்காயிருத்தல் வேண்டும் எனக் கொள்ளலாம்.

## கவிமணி பாடல்

இந்த இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் நாஞ்சில் நாட்டில் மாடன் கொடையும், அம்மன் கொடையும், காளியூட்டும் பெரும்பாலான ஊர்களில் நிகழ்ந்து வந்தமையைக் கவிமணி தம் மருமக்கள் வழி மான்மியத்தில் குறித்துள்ளார்:

'போன கொடைக்குப் புதிதாய் வந்த
வில்லுக்காரி வீரம்மைக்கு
நாலு சேலேயும் ரூபாய் நாற்பதும்
கொடுத்தது நீயும் கூடி யல்லவோ?'

(கருடாஸ். 24-27)

'கதிகிடைக்கும் எனக் காளி
கொடை நடக்கும் காலம்
கடாத்தறித்துப் பொங்கலிட்டு
காத்திருந்தோம் அம்மா!' (கோடேறி: 516 : 2)

இவைபோன்று கவிமணி மருமக்கள் வழி மான்மியத்தில் தரும் குறிப்புகளால் அந் நூல் தோன்றிய இந்த நூற்றுண்டின் முதற்காற் கூற்றில் கொடைகளும் அதனை ஒட்டி வில்லுப் பாட்டுகளும் மிகுந்திருந்தமை தெரியவரும். ஆனால், வரவர இத்தகு நிகழ்ச்சிகள் குறைந்து கொண்டே வருகின்றன. எனினும், வில்லுப்பாட்டு இப்பொழுது தனியான கிராமிய நிகழ்ச்சியாகக் கலைக்காட்சிகளிலும் பிற சிறப்புக்களிலும் இடம் பெற்று வாழ்ந்து வருகிறது. 'நாட்டுப்புறக் கலை' என்னும் வகையில் இதுவும் போற்றத் தக்கதே.

## பழமொழித் தொடர்கள்

சிறு தெய்வக் கொடை—காளியூட்டு—வில்லடிப் பாட்டு என்பவற்றை ஒட்டிப் பிறந்து தென்னாட்டுப் பகுதிகளில் பழமொழிபோன்று வழங்கிவரும் தொடர்களும் சில உள்ளன.

'வில்லடிச்சான் கோயிலிலே
விளக்கு வைக்க நேரமில்லே'

என்பது வில்லுப்பாட்டின் ஈர்ப்பு சக்தி குறித்து வழங்கப்படுவதாகும். நேரம் இருளுவதையும், விளக்கிட வேண்டும் கடமையையும் மறந்து கோயில் பணியாளர் உட்பட எல்லாரும் அந்த இசைமயமாய்த் தம்மை மறந்துள்ளனர் என்பதனை இது காட்டும்.

வில்லடிச்சா கோவிலிலே
விளக்குப் பொருத்த நேரமில்லே'

என்று சிறு வேறுபாட்டுடனும் இது வழங்கும்.

வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நிறைவுறுவது வாழிபாடுதலோடுதான். அதன் பின் விழாக்கோலம், ஆரவாரம், உணர்ச்சிகள் எல்லாம் அடங்கிவிடும். பொருள்களைப் பல்வேறு வகையாலும் இழந்து நிற்கும் ஒருவன் நிலையை 'எல்லாம் வாழிபாடியாச்சு' என்று குறிப்பிடுவர்.

'காளியூட்டும் கணியான் கூத்தும்'

என்பது காளியூட்டு நிகழ்ச்சியில் கணியான் கூத்து சிறப்பிடம் பெறுதலைத் தெரிவிக்கும். சிறு தெய்வ வழிபாட்டை யொட்டி வழங்கப் பெறுபவை பின் வருமாறு:

'சாமி வந்தாராம் சங்கடம் சொன்னாராம்'

'கொட்டில்லாமலே ஆடுவான்'

'ஆடிப் பூவெடுத்திட்டான்'

'குடுப்பாரைக் கண்டா சாமி கொணட்டிக் கொணட்டி ஆடுமாம்'

'பூடந்தெரியாம சாமி ஆடாதே'

'கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போல்'

'நேர்ச்சக்கிடாப் போலத் திரியறான்'

'பலிகிடாப் போல'

'படைப்புப் போட'

'சாமி மலையேறிப் போச்சு'

'பத்ரகாளி பலிபீடம் போல'

'ஈனாப் பேச்சி போலத் திரிகிறான்'

'ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டினாப் போல'

'பெண்ணுக்கு ஒரு கும்பிடு வில்லுக்கு ஒரு கும்பிடு'

'சாமி வரங்கொடுத்தாலும் பூசாரி இடங்கொடுக்க மாட்டான்'

'ஊரிரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்'

'கும்பிட்ட தெய்வம் குலதெய்வம்'

இவ்வாருன பற்பல தொடர்கள் மக்களின் நடைமுறை வாழ்க்கையில் வந்து நடையாடுவதற்குக் காரணம் வில்லுப்பாட்டும் சிறு தெய்வ வழிபாடுகளுமேயாம்.

### ஈனமுத்து கதை

இப்பொழுது வெளியிடப்பெறும் ஈனமுத்துப் பாண்டியன் கதை வில்லுப்பாட்டாய்ப் பாடப்பட்டது ஆகும். இதன் ஆசிரியர் பெயர் அறியக்கூடவில்லை. ஆனாலும், ஈன முத்து வாழ்ந்த வள்ளியூர்ப் பகுதியில் தான் இக் கதையும் பிறந்திருக்க வேண்டும் என்று துணியலாம். அதுவும் ஈனமுத்து மடிந்த கி.பி. 1832ஆம் ஆண்டினை ஒட்டியே இது தோன்றியிருத்தல் கூடும். இக் கதை அந்த வட்டார மக்களிடையே பெருக வழங்குவது என்பதும் தெரியவருகிறது.

இந்தக் கதைப்பாடலின் ஏட்டுப் பிரதியைத் தேடிக் கொண்டுவந்து தமிழாய்வுத் தொகுதியில் வெளியிட உதவியவர், தமிழ்த்துறையில் டாக்டர் பட்ட ஆய்வாளராயிருக்கும் திரு. சு. சண்முகசுந்தரம் எம். ஏ. ஆவார். இக் கதைப் பாடலின் வரலாற்றையும், பாட்டிலிருந்து தெரியவரும் வரலாற்றுச் செய்திகள், வட்டார வழக்குகள் முதலியவற்றையெல்லாம் அவர் எழுதியுள்ள 'அறிமுகவுரை' என்னும் அடுத்தப் பகுதியால் அறியலாகும். திருநெல்வேலி மாவட்ட நாட்டுப் புறப் பாடல்களை ஆராயும் அவர்தம் முயற்சி பாராட்டத் தக்கது.

### சில செய்திகள்

இவ் வெளியீட்டிற்கு பயன்பட்டது ஒரே ஒரு ஓலைச்சுவடியே. இன்னும் வேறு சுவடிகள் கிட்டினுல் இப் பாட்டு மேலும் சில திருத்தங்கள் பெறுதல் கூடும்.

இக் கதைப் பாட்டு ஈனமுத்தின் மறைவுடன்—அவனைச் சுட்டுச் சாம்பலாக்கித் தாம்பிரபரணியில் கரைப்பதோடு நின்றுவிடுகிறது. 'பேயாய் விளங்கினுனே பேர் பெரிய ஈனமுத்து' என்று அவன் பேயானுன் என்ற செய்தியுடன் நிறைவுறுகிறது.

பேயான ஈனமுத்துத் தெய்வமாகப் போற்றப்பட்ட வரலாற்றை ஆசிரியர் பாடவில்லை. அதோடு பெரும்பாலான வில்லுப்பாடல்களில் வாழ்த்துடன் முடிவது போன்று வாழ்த்தும் இதில் காணப்படவில்லை. இவற்றையெல்லாம் நோக்க இப் பாடல்-பிரதி குறைப் பிரதியாய் இருக்கலாமோ என்று எண்ண இடமாயுள்ளது.

வட்டார வழக்குகளையும் மக்களின் பேச்சில் சொற்கள் உருமாறி வரும் வகையினையும் அறிய இது போன்ற வில்லுப்பாட்டுகள் பெரிதும் துணை செய்யும். இந்தப் பாடலில் தென் பாண்டி நாட்டு வழக்குகள் பல இடம் பெற்றுள்ளமை காணலாம். எனவே, தமிழ் மொழியின்

வரலாற்றில் நாட்டுப்புறப்பாடல்களும் ஒரு தனியிடம் பெறுவன. இத்தகைய பாடல்கள் பலவும் மொழியாராய்ச்சிக்கும், நாட்டு வரலாற்றிற்கும், சமுதாய வரலாற்றிற்கும் பெருந்துணை செய்வனவாகும். ஆதலால், சங்க இலக்கியங்கள் போன்ற பண்டைப் பெருஞ் செல்வங்களோடு நாட்டுப்புறப் பாடல்களாகிய வாய்மொழிப் பாடல்களும் நம் போற்றுதலுக்குரியனவே. ஆய்வாளர்களின் நாட்டம் இவ்வகைப் பாடல்களின் மேலும் இப்பொழுது சென்றிருப்பது பெரிதும் போற்றத்தக்கது.

சென்னை-5.
31—12—74.

மு. சண்முகம் பிள்ளை

# அறிமுகவுரை

ஈனமுத்து கதைப்பாட்டின் ஓலைச்சுவடியை நான் 1974ஆம் ஆண்டு சூன் மாதம் 26ஆம் நாள் தெற்கு வள்ளியூர் திரு. சுப்பையாத் தேவரிட மிருந்து பெற்று வந்தேன். இதை எழுதியது யாரென்று தெரியவில்லை. வில்லுப்புலவர் ஒருவர் இக் கதையை எழுதிக்கொடுத்திருக்க வேண்டும்.

**கதைச் சுருக்கம்**

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த தெற்கு வள்ளியூரில் வாழ்ந்த நாராயணத் தேவருக்கும் கரிப்பி என்னும் பெண்ணுக்கும் பல ஆண்டுகள் பிள்ளைப்பேறில்லை. இவர்கள் வணங்காத தெய்வமில்லை; வலம்வாராத கோயில்களில்லை. இறுதியில் சுப்பிரமணியரே இவர் களுக்குக் குழந்தை வரம் கொடுத்தார். இறையருளால் ஈனமுத்து பிறந்தான்; ஈடு இணையில்லாமல் வளர்ந்தான்; எல்லாவற்றிலும் சிறந்தான்.

அப்போது சிங்கம்பட்டி ஜமீனில் சிவனணைந்த பெருமாள் ஆட்சி செய்து கொண்டிருந்தார். அவரது மருமகனுக்கும் மலையாளத்துப் பொன்பாண்டித் தேவருக்கும் காவல் தகராறு ஏற்பட்டுப் போராக வளர்கிறது. மருமகனுக்கு உதவ மாமனார் வருகிறார்; ஜமீன்தாருக்கு உதவ ஈனமுத்து வருகிறான். முப்பந்தல் போரில் முதல் வெற்றியைப் பெற்றான் ஈனமுத்து. இவனது திறத்தை மெச்சி ஜமீன்தாரும் தன்னோடு சிங்கம்பட்டிக்கு இவனை அழைத்துச் செல்கிறார். அங்கே கள்ளவெண்ணியின் சூழ்ச்சியை முறியடித்து ஜமீன்தாரைக் காப் பாற்றுகிறான் ஈனமுத்து.

ஈனமுத்துவின் பதவி உயர்கிறது. இதைக் கண்ட சிலர் பொறுக் காமல் இவனைத் தாழ்வுறுத்த முயல்கிறார்கள். இவர்களது முயற்சிக்கு ஆதரவாக இவனுக்கும் ஜமீன்தார் மனைவிக்கும் கள்ளக் காதல் ஏற்படு கின்றது. ஜமீன்தார் ஈனமுத்தை வெளியேற்றுகிறார்.

சொந்த ஊர் வந்த ஈனமுத்துக்கு அவள் உள்ளோலை எழுதுகிறாள். காதலியைப் பார்க்க வந்தவன் கைவிலங்கையும் காவல் சிறையையும் பெறுகிறான். காவலிலிருந்து தப்பித் தெற்கு வள்ளியூரிலும் மறுகால் குறிச்சியிலும் தலைமறைவாய் வாழ்க்கை நடத்துகிறான். ஈனமுத் தைப் பூதத்தேவன் காட்டிக் கொடுத்ததால் அகப்பட்டுக் கொண்டான். இவனது தப்பும் முயற்சிகள் பலிக்கவில்லை. ஜமீன்தார் பழி வாங்கத் துடிக்கிறார். இவனது உடலில் நெய்ப்பாளம் போட்டு நெருப்பிட்டுச் சுடுகிறார்கள். இவன் உடல் நெருப்பில் வெந்து சிங்கம்பட்டிக்கு அருகி லோடும் தாம்பிரபரணியில் சாம்பலாய்க் கரைக்கப்படுகிறது.

### கதையின் காலம்

இக் கதைப் பாடலின் இறுதியில், "1007ஆம் ஆண்டு தை மாதம் பட்டது; 32 வயது பரணம்; புறந்தது 975," என்று குறிப்பு உள்ளதால், ஈனமுத்தின் காலம் கி. பி. 1800—1832 என்பது தெளிவுபடும். 32 வயதான ஈனமுத்தின் வாழ்க்கை முழுமையும் வியக்கத்தக்கதே.

ஐவர்ராசாக் கோட்டை வழியாய் ஈனமுத்து மறுகால்குறிச்சி சென்றதை, "ஐவராசாக் கோட்டை விட்டு" (651) என்று கூறுகிறுர் புலவர். ஐவர் ராசாக்களின் கோட்டை கி. பி. 1226-ல் கட்டப்பட்டு, கி. பி. 1545-ல் அழிந்திருக்கலாம் என்று திரு. நா. வானமாமலை தமது ஐவர் ராசாக்கள் கதையில் குறிக்கிறுர். அவ்வாருனுல், ஈனமுத்து அழிந்த கோட்டை வழியாய்ப் போயிருக்க வேண்டும் அல்லது அக் கோட்டை கி.பி. 1832-க்குப் பிறகு அழிந்திருக்க வேண்டும்.

### கதை பற்றிய சில செய்திகள்

1. ஈனமுத்துக்கும் ஜமீன்தார் மனைவிக்கும் உள்ள கள்ளக்காதலைப் பாடலில் புலவர், தெளிவாய்க் குறிக்கவில்லை. ஆனுல், "எழுதி விட்டாளே உள்ளோலை" (449) என்ற குறிப்பும், அவன் ஆர்வமொடு தன்னை அலங்கரித்துக் கொள்வதும், ஆர்தடுப்பினும் மீறிச் சிங்கப் பட்டிக்குப் புறப்படுவதும், "வாளுள் மருகுதே, குடிகெடுத்த சண்டாளி யால்" (815-820) என்ற இறுதி இரங்கலும் இவர்களின் காதலைத் தெரியப்படுத்துகின்றன.

2. ஈனமுத்தைப் புலவர் பாரப்பிள்ளை, முகைனயுள்ளவன், கட்டழகன், அழகுபிள்ளை, செல்லப்பிள்ளை, சூரப்புலி, பாயும்புலி, புத்தி யுள்ளவன் என்று பலவாறு பாராட்டுகிறுர். இவ்வாறு பாராட்டும் போதே பாவிமகன், சண்டாளன், குடிகெடுத்தவன் என்றும் பழிக் கிறுரே. ஏன்? அன்பாகப் பழிக்கிறுரா? அவனது அடாத செயலுக்கா கப் பழிக்கிறுரா? இவை நம் சிந்தையில் தோன்றும் ஐயப்பாடுகள்.

3. "ஆருவாய் மொழி வாசல் மட்டும்
ஆடுகிடாப் போல வெட்ட" (205-206)

என்பது போன்ற இனிய உவமைகள் பல உள்ளன.

4. "வெட்டும்புலி குத்தும்புலி, வீரப்புலி சூரப்புலி,
ஆணைக்கண்டால் ஆணழகன் அழகுபிள்ளை ஈனமுத்து"

என்பதில் எதுகையும் மோனையும் இயல்பாய் வருகின்றன.

5. இருக்கின்ன வேளையிலே, சொல்லியல்லோ, தெரிசனத்தில், புறக்கிறது, என்னை மஞ்சன, ஒண்ணுரெண்டு, மாத்தயிலே போன்ற பாமரவழக்குகளும் இப் பாடலில் மிகுந்த அளவில் கலந்து வருகின்றன.

## கதை பற்றிய குறிப்புகள்

1. ஜமீன்தாரால் துரத்தப்பட்ட ஈனமுத்து சிறிது காலம் தெற்கு வள்ளியூரில் வாழ்ந்து வந்தானும். இரவு 10 மணி வரை தன் வீட்டுத் தோட்டத்திற்கு நீர் இறைப்பானும், அதற்குப் பிறகு யாரும் அறியா மல் சிங்கம்பட்டி போய் விடியுமுன்னர் திரும்பி விடுவானும்.

2. ஈனமுத்து மாண்டதும் அவனுக்குச் சிங்கம் பட்டியில் மூன்று சிலைகள் செய்யப்பட்டன. அவற்றில் ஒன்று அரண்மனையிலும் ஒன்று தெற்கு வள்ளியூரிலும் இன்னொன்று மணி முத்தாற்றுக்கும் பாப்பான் குளத்துக்கும் இடையிலும் காணப்படுகின்றன. இச் சிலைகள் செய்யக் காரணம் அவன் பேயாகிப் பிறருக்குத் துன்பம் கொடுத்ததுதான். எனவே, அவனைச் சாந்தி செய்யவே ஜமீன்தார் உட்படப் பலர் முயன்றனர் போலும்.

3. ஈனமுத்துக்குக் கொடைவிழா நடத்தும்போது அவனுக்கு ஆடக்கூடியவர் அவனைப் போன்றே பொடிபோடுவார். பலர் காணிக் கையாகப் பொடியையே கொடுப்பதுண்டு. சாமியாடி ஈனமுத்துவைப் போன்று சிலம்பச் சண்டை செய்வார். பலர் பிடிக்க முயலும் போது தப்பி ஓடுவார். இறுதியில் அகப்பட்டதும் தீப்பட்டது போல் துடிப்பார்.

4. இவனுக்கு மணமாகாததால் வாரிசுகள் இல்லை. இவனது அண்ணனது வாரிசுகளே இன்று வாழ்கின்றனர். அவர்களுள் ஒருவரே இந் நூலின் ஏட்டைத் தந்த திரு. சுப்பையாத் தேவர்.

5. இவனது உருவச்சிலையில் ஒரு வீரனுக்குரிய அத்தனை சிறப்பு களும் உள்ளன. கைகளில் அரிவாளும், கழுத்தில் மாலையும், கண்ணில் வீரமும் பளிச்சிடுகின்றன.

## கதைப் பாட்டு பற்றிய குறிப்புகள்

இக் கதையில் சிறு தலைப்புகளை மட்டும் நான் சேர்த்திருக்கிறேன். எழுத்துப் பிழைகளைத் தவிர வேறு எந்த அசைகளையும் அடிகளையும், நான் மாற்றவில்லை.

இக் கதையை எனக்குச் சின்ன வயதில் சொன்ன என் மாமனார் இராமசாமித் தேவருக்கும், இன்று இதை நான் பெறும் வகையில் பெரிதும் உதவிய என் மைத்துனர் வேம்புத் தேவருக்கும் நன்றி பாராட்டுகிறேன்.

இக் கதைப்பாட்டைத் தமிழாய்வு இதழில் வெளியிடுவதற்கு ஊக்கமளித்து வழிகாட்டியுதவிய, என் டாக்டர் பட்ட ஆராய்ச்சி மேற்பார்வையாளர், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களுக்கு என் வணக்கமும் நன்றியும் உரியனவாகுக. ஏட்டுப் பிரதியுடன் ஒப்பிட்டு நோக்கிப் பதிப்பு நெறிமுறைகளை வகுத்துக் காட்டி ஏற்ற குறிப்புகளையும் எழுதுவதற்குத் துணைபுரிந்த திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதித் தமிழ் விரிவுரையாளர் புலவர் மு. சண்முகம் பிள்ளை அவர்களுக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை-5,
25-12-74 (2005)

**சு. சண்முக சுந்தரம்**

# ஈனமுத்துப் பாண்டியன் கதை

### குழந்தைப்பேற்றுக்குத் தவம்

தேனிருந்து மழைபொழியும்
தெற்கு வள்ளியூர் தலமதிலே
ஆண்டு இருக்கிற நாளையிலே
நாராயணத் தேவரும்
முகைனயுடன்[1] வாழும்போது,
நல்லதொரு பெண்கொடியாள்
கரிப்பி நல்ல பெண்கொடியாள்,
குழந்தையில்லை என்று சொல்லி,
சுப்பிரமணியர் கோவில் போய்
மாதாந்த சேர்வை[2] செய்ய
[லுற்ருள்,
குழந்தையில்லை என்று சொல்லி
முந்திதவம் தானு மிருந்தாள்.
தவசு பண்ணுகிற வேளையிலே
சுப்பிரமணியர்,
தானே பாத்துக்கொண்டிருந்தார்.
அப்படி இருக்கின்ன வேளையிலே
குழந்தை தவசு செய்யி நாள்,
'குழந்தை வசி[3] குடுக்க வேணும்'
என்று சொல்லியல்லோ
[சுப்பிரமணியர்
குழந்தை பலன் தானும்
கொடுத்தார்.
தெரிசனத்தில் வந்து சொன்னர்.

### முருகன் அருள் வாக்கு

'புறக்கிறது ஆண் குழந்தை
பேரு நல்ல ஈனமுத்து'
என்று சொன்னரே
[சுப்பிரமணியர்.
"பிள்ளை புறந்தவுடன் கைநெறைய
பொன்களுமே போடவேணும்.
போட்டு முடித்தவுடன்
தாடகத்தி அம்மனுக்கு
பொங்கலிட்டு பொலி கொடுத்து
யெண்ணை மஞ்சண தானும்
சாத்து."[4]

### கருவிலே உரு

அப்படி இருக்கின்ற வேளையிலே
வயத்தில் கருவாக
[இருக்கும்போது,
காலநாக சனித்தானும்
ஒண்ணுரெண்டு மாத்தயிலே
உருவாக வளருகிருர்;
மூணு நாலாம் மாத்தயிலே
மூர்க்கமாக வளருகிருர்;
அஞ்சு ஆரும் மாத்தயிலே
துள்ளுகிருர் கருக்குழியில்;
ஏழு எட்டாம் மாத்தயிலே
ஏகமாய் வளருகிருர்.
ஒன்பதாம் மாத்தயிலே
ஓங்கி நல்ல வளருகிருர்.

### பிறப்பிலே வியப்பு

பத்து நல்ல மாத்தயிலே
தங்க நெறம்போல புறந்தாராம்;
புறந்து கீழே கிடக்கும்போது
துள்ளுகிருர் வீடு யெங்கும்.
அண்டைப் பெண்களெல்லாம்
ஆச்சரியப் பட்டார்கள்:
'புள்ளைகள் பொறக்கும்
[கண்டோம்.
இந்தப் பிள்ளையைப்போல்
கண்டதில்லை'
புள்ளை புறந்து ஆரும் மாசம்
பொன்கை நிறைய தானும்
[போட்டார்.[5]

### பெருமை மிக்க வளர்ப்பு

சுப்பிரமணியரை வாத்தி
[பேருமிட்டு,
ஆறு மாசம் ஒருவருசம் செல்ல,
அழகுபிள்ளை ஈனமுத்து
பாலோடே பண்ணையோடே
பாக்கியத்தோட இருக்கையிலே,

ஒண்ணுரெண்டு வயதாகி
இருக்கின்ற வேளையிலே,
மூணு நாலு வயதினிலே
புலிபோல வளருகிறார் ;
அஞ்சாறு வயததிலே [1]
அஞ்சாமல் பேசுவாராம்.

### பள்ளியில் கல்வி

ஏழு நல்ல வயததிலே
பள்ளிக்குத் தானும் வைத்தார் ;
எட்டு நல்ல வயததிலே
எடுத்த ஓலைதான் வாசித்தார்
ஒன்பதாம் வயததிலே
கொடிய கணக்குகள் தான்
படித்தார்.
பத்து நல்ல வயததிலே
பாரதங்கள் தான் படித்தார் ;
பதினொரு வயததிலே
இலக்கணம் தானும் கற்றார்.
பனிரெண்டு வயததிலே
பல சாஸ்திரம் தானும் கற்றார்.
பதிமூணும் வயததிலே
அழகுபிள்ளை ஈனமுத்து,
சகல படிப்புகளும் படித்துக்
[கொண்டு,
பள்ளியை விட்டுத் தானும்
[வந்தார்.

### வீரமும் விவேகமும்

படிப்பு முடிந்தவுடன், வீரப்புலி
[ஈனமுத்து
சிலம்ப அடி தானும் கற்றார்.
கன்னம் களவு தானும் கற்றார்.
கூடுவிட்டுக் கூடு பாயும்
நெட்ட ஓட்டம், நெடிய ஓட்டம்,
குட்ட ஓட்டம் தானும் கற்றார்.
எல்லா வித்தையும் தானும் கற்று,
பதிநாலாம் வயததிலே—
பாரப்பிள்ளை ஈனமுத்து,
பாயும் புலிபோல இருந்தாராம்.

வீரப்புலி சூரப்புலி,
வெட்டும்புலி குத்தும் புலி,
வீரப்புலிபோல இருந்தான்.
பாவிமகன் ஈனமுத்து,
தந்திரத்தில் கெட்டிக்காரன் ;
சமத்தன் நல்ல கெட்டிக்காரன் ;
புத்தியிலே பெரியவன்தான்.
முகனையுள்ள ஈனமுத்து,
ஆண்டிருக்கு நாளையிலே—
நாராயணத்தேவரும்,
நல்லதொரு பெண்கொடியாள்,
கரிப்பி நல்ல பெத்தெடுத்த
கட்டழகன் ஈனமுத்து
பாலோடே பண்ணையோடே
பாக்கியத்தோட இருக்கயிலே—
சீரோட இருக்கயிலே
சிலு°வந்து சேர்ந்ததையா.

### அம்பலவாண புரத்தில் [திருமணம்

பதினாறு பிராயத்திலே
பாரப்பிள்ளை ஈனமுத்து,
சிங்கம்பட்டி ஆதிக்கத்தில்
சிவனணைஞ்ச பெருமாள் துரை—
ஆறில் ஒன்று கடமை வாங்கி,[2]
அசையாத மணியும் கட்டி,
ஆண்டிருக்கும் நாளையிலே—
ஆனதொரு துரைமகளை,
அம்பலவாண புரமதிலே
முத்துஇருளப்பத் தேவருக்குக்
கலியாணம் செய்யலுற்றார்.
கலியாணம் கழிந்தவுடன்
கட்டுடனே இருக்கயிலே—

### காவல் பணம்

முத்து இருளப்பத் தேவர்
முகைனையுடன் வாழும் போது,
காவல் கட்டு கட்ட வேணும் ;
சவிக்கை காவல்[3] கட்ட வேணும் ;
தானே முத்துஇருளப்பத் தேவர்
அரண்மனைக்குப் போயி அல்லோ,
அம்மான் இடத்தில் தெரியப்
[படுத்த,
சிவனணைஞ்ச பெருமாள் துரை
வாசப்பிரதானியை வரவழைத்து,

வந்தார்கள் துரையவர்கள்.

### படை யெடுப்பு

சிவல குதிரைக்குச் சீனிவைத்து,
ஆனைப்படை அலங்கரித்து,
சேனைப்படை தானும் கொண்டு,
கத்தி கேடயம் கையிலெடுத்து,
ஆயுத பாணி தானும் கொண்டு,
பூணு கெட்ன கம்பும் கொண்டு,
சிவனணைஞ்ச பெருமாள் துரை
படையோடு புறப்படுவார்.
பாளையக் காரரும்,
பதினெட்டு சுத்த வீரரும்,
கொப்பறை தோப்பும்[9] விட்டு ;
புளவக் கல்லு[10] தனைக் கடந்து ;
களக்காடு[11] பாதை கூடி ;
கொச்சி பொத்தை[12] தனைக் கடந்து ;
திருக்குறுங்குடி[13] பாதை கூடி ;
சூட்டு மலைப் பொத்தை[14] பாதை கூடி ;
வடக்கு வள்ளியூர்[15] தலமதிலே—
வாராரே ஒரு முகமாய்.
தேனிருந்து மழை பொழியும்
தெற்கு வள்ளியூர் தானும் வந்தார்.
அத்தாளம்[16] அலங்கரித்து,
பித்தாநாள்[17] காலத்திலே—
ஆனைக்கண்டால் ஆனைமுகன்
அழகு பிள்ளை ஈனமுத்து,
வல்லயத்தில் கெட்டிக்காரன்,
மானிடத்தில் கண்டதில்.
வெட்டும்புலி குத்தும் புலி,
வீரப்புலி சூரப்புலி,
ஆனைக் கண்டால் ஆனைமுகன்
அழகுபிள்ளை ஈனமுத்து
ஆகதக்க ஒன்றாய் கூடி,
வள்ளியூர் தலமும் விட்டு ;
வாய்த்த இடகாடு விட்டு ;
சிவனணைஞ்ச பெருமாள் துரை,
செல்லப்பிள்ளை ஈனமுத்து,
பாளையக் காரர்களும்,
பதினெட்டு சுத்த வீரர்களும்,
பசைபதி நாடும்[18] விட்டு
போறார்கள் ஒரு முகமாய்.
கன்னியா குமரியுட[19]
கட்டான வழியுமிட்டு ;
அம்பலவாண புரமதிலே[20]—
அருமை மருமகன் வீடதிலே—
போய்ச்சேர்ந்தார்கள்.
அரமனையார் அம்மானைக் கண்டவுடன்,
தண்டு தாம்பூலம்
தானும் வைத்துக் கண்டார்கள்.[21]
அத்தாளம் அலங்கரித்து,
பித்தாநாள் காலத்திலே
சேனைப் படை அலங்கரித்து,
கத்திக் கேடயம் எடுத்துக் கொண்டு,
வேல்களும் ஈட்டிகளும்
வீச்சருவாள் தானேயெடுத்து,
போறார்கள் ஒருமுகமாய்.

### முப்பந்தல் போர்

அம்பலவாணபுரம் கடந்து,
சிவனணைஞ்ச பெருமாள் துரை—
செப்பந்தல் மொழி மடவார்
முப்பந்தல்[22] போய்ச் சேர்ந்து,
கச்சை கெட்டி இடையிறுக்கி,
கத்தி போர்கள் செய்ய வேணும்.
அப்படி இருக்கின்ற வேளையிலே—
மலையாளம் பொன்பாண்டித் தேவர்
படையோடு வருகின்றாரே.
ஆரவாய் மொழியும்[23] விட்டு
வாராரே ஒரு முகமாய்.
அவர்கள் கச்சை கட்டி இடையிறுக்கி,
ஆயுத பாணியோட வந்து சேர்ந்தார்.
முப்பந்தல் வந்தார்கள்,
சண்டைகள் செய்யலுற்றார்.
இவரை அவர் அடிக்க,
அவரை இவர் அடிக்க,

இவர்கள் அவரை வெட்ட,
அவரை இவர்கள் வெட்ட,
ஆருவாய் மொழி வாசல் மட்டும்
ஆடு கிடாப் போல வெட்ட,
வெட்டிக் குமித்தாரே அரண்
[மனையார்;
பக்கத்திலே நின்று கொண்டு
வெட்டினுனே ஈன முத்து;
தந்திரமாய் நின்றல்லவோ;
சாச்சானே படையை எல்லாம்,
அடித்தாரே ஈனமுத்து ;
உயிர்களும் மருக மருக
[அடித்தாரே.
அடித்த அடி பொறுக்காமல்
அடியோட ஓடிப்போனுர்.
சண்டாள ஈனமுத்து
துரத்தியங்கே அடிக்கிறனே.
'வெங்கல பாத்திரக் கடைக்குள்
மதயான போல' வே[24]
போய்ச்சேர்ந்தார் ஈனமுத்து.
பாவி அடித்தாரே கண்கிறங்க.

## ஈனமுத்து சிங்கம்பட்டி செல்லல்

அங்கே காவல்களும் கட்டிக்
[கொண்டு,
வாரார்கள் ஒருமுகமாய்.
முப்பந்தல் வழியும் விட்டு,
வாரார்கள் சேனைகளும்.
அம்பலவாண புரமதிலே—
வந்தார்கள் படைகள் எல்லாம்.
ஆகதக்க ஒன்ருய் கூடி,
அத்தாளம் அலங்கரித்து,
ஆறுமாச காலமதாய்,
சிவனணைந்த பெருமாள்
சமூன் சிங்கம்பட்டி போய்ச்
[சேர்ந்தார்.
அப்படியே ஈனமுத்து
அந்தச் செய்தியைத் தான
[நிந்து
போய் வாரேன்' என்று சொல்லி,
புறப்பட்டான் ஈனமுத்து.
ஊருக்குப் போய் வாரேன்
வழியனுப்பித்தார் அரமனையில்.
'போக வேண்டாம் போக
[வேண்டாம்
புத்தியுள்ள ஈனமுத்து.
அரமனையில் இருக்கவேணும்,
வாசப் பிரதானியாய் இருக்க
[இருக்கவேணும்.
ஒருநாள் ஒரு பொழுது
உன்னை வைத்து பாராமல்
[இருப்பேனே ?'
அரமனயில் சூரப்புலி ஈனமுத்து
அப்படிஇருக்கின்ன வேளையிலே—

## ஜமீனுக்கெதிராகச் சதி

அம்பலவாணபுரம் ஆண்டிருக்கு
[நாளையிலே—
முத்து இருளப்பத்தேவருட
முகனையுள்ள ஈனமுத்து,
அம்பலவாண புரத்தாரும்,
ஆறுபங்கு நாட்டாரும்,
பெத்தார் புறந்தாருபோல்
கூடி இருந்தார்கள் இருபேரும்.
அப்படி இருக்கின்ன வேளையிலே-
ஆதிக்கம் சங்கர உடையாரும்,
சங்கர உடைய அம்மாளும்,
தானும் இருக்கும் வேளையிலே—
அத்தாள நல்லூர் [25]
கள்ள வெண்ணியை
[வரவழைத்து,
சங்கர உடைய அம்மாளும்
தானே செய்தி சொல்லுவாளாம்!
'என்ன செய்தி, என்ன காரியம் ?'
என்று கேட்டான் கள்ள
[வெண்ணி.
வடக்கஅரமனை துரையும் நல்ல
தலயறுத்துப் போட வேணும்!'
தானே சேதி சொல்லுவாளாம்.
அவன் 'ஆமென்'று சம்மதித்து,
'எட்டு நாளைக்குள்ளே
[தலையறுத்து
தாரேன்' என்று சொன்னுனே !
சங்கர உடைய அம்மாளுக்குச்

சந்தோசம் தானும் வந்து,
'பண்ணை பாட்டம் தாரேன்;
[என்றும்
உன்னைப் பக்கத்திலே வைத்துக்
[கொள்வேன்.
பாரப்பிள்ளை கள்ள வெண்ணி
என் மனம் போல முடித்தா
[யானல்,
உன்னை ஒருக்காலமும் மறக்க
மாட்டேன்!'
என்று சொன்னாளே சங்கர
[உடைய அம்மாளும்
அப்படி இருக்கின்ன சமயத்திலே-

## சதிக்குச் சதி

ஆணைக்கண்டால் ஆணழகன்
அழகு பிள்ளை ஈனமுத்து
அரமனையில் சாப்பிட்டு,
அந்தச் செய்தியைத்தான்
[அறிந்தார்.
பெரியசாமி துரையிடத்தில்
வீரப்புலி ஈனமுத்து,
'உங்கள் தலையறுத்துப்
[போடுதற்கு
துப்புவந்தது என்னிடத்தில்'
என்று சொன்னாரே ஈனமுத்து.
துரையவர்கள் சொல்லுகின்றார்:
'இந்த கள்ளனைத்தான் புடிக்க
[வேணும்'
என்று சொன்னார்கள்
[சமீன்தாரும்.
ஈனமுத்து 'ஆமென்று சம்மதித்து
புறப்பட்டார் அரமனையாரும்;
சிவலக் குதிரைக்குச் சீனி வைத்து
புறப்பட்டார் காவலரும்.
குடிகெடுத்த ஈனமுத்து
தானும் போனார் ஈனமுத்து.
சிறப்புடனே பேர்கையிலே—
எட்டோட எட்டு நாளாய்
தானும் இருந்தார் ஈனமுத்தும்.

## கைதானான் கள்ள வெண்ணி

அத்தராத்திரி வேளையிலே—
ஆன நல்ல சாமத்திலே—
தலையை அறுக்க வேணுமென்று,
கள்ள வெண்ணி தானும் வந்தான்.
வருகின்ற சமயத்திலே—
கண்டாரே ஈனமுத்து.
கண்டவுடன் கள்ள வெண்ணி
மச்சிமேல் ஏறிக் கொண்டு,
தானும் இருந்தான் கள்ள
[வெண்ணி.
கதவை நல்ல துறந்துகொண்டு,
முக்கு முக்காய்[27] தேடுகிறான்;
இருட்டில் மச்சி மேல் ஏறி பார்த்
[தான்.
பார்த்த அந்த சமயம் நல்ல
கள்ள வெண்ணியும் தானும் கண்
[டான்.
கைப்பிடியாய் பிடித்துக்கொண்டு,
பாயும்புலி ஈனமுத்து
மொழியோட மொழியெடுத்து,
கெட்டினார்கள் கையிரண்டும்.
அழகு பிள்ளை ஈனமுத்து
கொண்டு வந்தார் அரமனையில்.
அத்தாள நல்லூர் கள்ளவெண்ணி
கள்ள முழி முழிக்கிறானே.
சென்னயில் அடித்த அடி
பல்லுகளும் உடைந்து போச்சு.
அழகு பிள்ளை ஈனமுத்து
டேசன்யிடம்[28] தெரியப்படுத்தி
கொண்டு போனார்கள் போலீஸ்
[காரரும்.
செம்மதீர்ப்பு செய்துபோட்டு,
வாரார்கள் துரையவர்கள்.
பேர் பெரிய ஈனமுத்தும்
வாரார்கள் ஒருமுகமாய்.

## ஈனமுத்துக்கு அதிகாரம்

அத்தாள நல்லூர் விட்டு
சேர்ந்தாரும் சனத்தாரும்,
சிங்கம்பட்டியில் வந்து சேர்ந்தார்.
பெரியசாமி துரையும் பார்த்து,
பேர் பெரிய ஈனமுத்தை,

செய்தி சொல்வாராம் துரைய
[வர்கள் :
‘ஆவத்துக்கு உதவப்பட்ட
ஆணழகன் ஈனமுத்து !
உன்னாலே என்தலை திரும்பவும்
எழுதினான் பிரமதேவன்.
உனக்கு மேமுதலும்
உண்டாக்கித் தருவேன்’ என்றார்.
‘கும்பிடும் கம்பளியும் எனக்கு
[என்று,
மத்த அதிகாரம் உனக்கே
[யென்று,[29]
அண்ணன்தம்பி போல் இருக்க
[வேணும் !’
சொன்னார்கள் துரையவர்கள்.
‘ஆணை பிரமாணம் பண்ண
[வேணும்,
திருவிளக்கு உப்பு பால் வெடி
வேல்கத்திபிரமாணம் பண்ண
வேணும்.’[30]
ஆணை பிரமாணம் பண்ணிக்
கொண்டார்கள் :
ஆண்டு இருக்கிறான் ஈனமுத்து.

### எதிரிகள் அடங்கினர்

அப்படி இருக்கிற வேளையிலே—
ஆறுபங்கு நாட்டாரும்
சங்கரஉடைய அம்மாளும்,
இருகையும் ஒன்றாய் நின்று,
பெரியசாமி துரையிடத்தில்
சண்டை சல்லியம்[31] தானும்
[வந்து,
பட்டம் எனக்கு உனக்கு யென்றார்.

### பட்டண வியாச்சியம்

பெரியசாமி துரையவர்கள்
ஈனமுத்து தேவருமாய்—
‘பட்டண வியாச்சியம் பண்ண
[வேணும்’
என்று சொல்லியல்லோ சமீந்
[தாரும்,
சுத்தவீரன் ஈனமுத்தும்,
பய்நிறைய பணத்தைக் கெட்டி,
சிறப்புடனே புறப்படுவார் :
பட்டண வியாச்சியம் செய்து
[கொண்டு,
பாரப்பிள்ளை ஈனமுத்து
பெரியசாமி துரைபேர்க்கு,
பட்டமென்று உத்தரபேத்து,
கொண்டுதான் வந்தார்கள்.

### மொட்டை மனு

அப்படி இருக்கின்ன வேளையிலே
அரமனையில் உத்தபிள்ளையாய்
[இருந்தார்.
வீரகோட்கார ரெல்லாம்[32]
எழுதினார்கள் மொட்டைமனு.
கச்சேரி அடியாள் வந்து,
குடித்தனக்காரர் வந்து,
அரமனயில் சாடி சொல்ல;[33]
அருமான வார்த்தை கேட்டவுடன்
துரையவர்கள் வெக்கப்பட்டு,
‘என்ன சொல்வேம், ஏது சொல்
[வேம்
அண்ணன் தம்பிபோல் இருந்த
[துக்கு
மானபங்கம் செய்து போட்டான்.’

### உறவும் பகையும்

அப்படி இருக்கின்ன வேளையிலே-
பின்னும் வந்து கோள் சொன்னார்
(கள்
மனவருத்தம் உண்டாகி, பெரிய
[சாமி துரையவர்கள்
வாய்துறந்து சொல்லுகின்றார்;
குடிகெடுத்த ஈனமுத்தை,
கூப்பிட்டு சொல்லுகின்றார் :
சீரோட இருக்கயிலே—
சிலுவு வந்து வளைந்தய்யா.
பெரியசாமி சமீந்தாருக்கும்
ஈனமுத்து தேவருக்கும்
மனஸ்தாபம் தானும்வந்து,
‘அரமனயில் விட்டு வெளியில் போ
படிவாங்கிக் கொண்டு போ,’
[என்றார்.
அப்போது ஈனமுத்து
‘வாசப்படியா?’ என்று கேட்டார்.

'உன்மாமன் மச்சினன் வீடுபோய்
சமயல் செய்து சாப்புடெ'ன்றார்.
அப்போது ஈனமுத்தும்—
'அருவா புடியோ?' என்று கேட்
[டார்.
துரையவர்கள் சொல்லுகின்றார்:
'மெத்தநல்ல பெரியவர்தான்!'
அப்போது ஈனமுத்து சொல்லு
[கின்றார்:
'மலையில் இருக்கின்றார் பெரியவர்
[தான்'
என்று கேட்டார் ஈனமுத்து:
பெரியசாமி துரையுமங்கே—
'கண்ணில் முழியாதே!' என்று
[கேட்டார்.

அப்படியே ஈனமுத்து
ஆனமொழி கேட்டவுடன்—
சண்டை வந்த போது,
தான் இருக்கக்கூடாது;
பக்கத்திலே இருந்து கொண்டு,
மாமன் மச்சினன் வீடுபோய்
அண்டைவீட்டில் தான் இருந்து
ஆணழகன் ஈனமுத்து,
ஒருமாதம் தானும் இருந்தார்.
'நாமள் ஊருக்குப் போக
[வேணும்!'

### வீடுநோக்கி ஓடிவந்தார்

சிங்கம்பட்டி ஊரும் விட்டு
வாராரே ஓர் முகமாய்.
கொப்பறை தோப்பும் விட்டு;
பொளவக்கல்லு பாதை கூடி;
பச்சையாறு பாதை கூடி;
களக்காடு தனைக்கடந்து;
கொச்சி பொத்தை பாதை கூடி;
திருக்குறுங்குடி தானும் வந்து;
ஆற்றில் காலத்திலே நானம்
[செய்து;
திருமலை நம்பியை சேர்வை
[செய்து;
சூட்டு பொத்தை பாதை கூடி;
வடக்கு வள்ளியூர் தலமும்வந்து;
திருமலைப்பாறையைச் சுற்றி
[வந்து;
சுப்பிரமணியரை சேர்வை
[செய்து;
வாராரே ஒருமுகமாய்.
தேனிருந்து மழைபொழியும்
தெக்கு வள்ளியூர் தானும்
[வந்தார்.

### விருந்தும் மகிழ்வும்

இராமுத் தேவர் வீடு வந்தார்.
'அத்தான் வாருங்கள்!' என்று
[சொல்லி,
ஆசனங்கள் தானும் செய்தார்.
வெத்திலை தாம்பூலம் தானும்
[போட்டார்.
எண்ணை தேய்த்து முழுகிக்
[கொண்டு,
இருவத்தொரு வகைக் கறியும்
பாங்குடனே சமையல் செய்து,
கோழிக்கறி தானும் வைத்து,
தலைவாழை இலையும் போட்டு,
இலையில் சாதம் கறிதான்
[படைத்து,
அதன்மேல் கோழிக்கறி தான்
[வைத்து,
இலை நிறையப் படைத்தார்கள்.[34]

### தேடிவந்த உள்ளோலை

சாப்பிட்டு இளைப்பாறி தாம்பூலம்
[தரிக்கும்போது,
எழுதி விட்டாளே உள்ளோலை.
ஓலையைப் பார்த்துக் கொண்டு,
அழகு பிள்ளை ஈனமுத்து—
பெருமூச்சு விட்டுக் கொண்டு,
சம்பங்கி எண்ணை தேய்த்து,
தலைசீவி கட்டிக் கொண்டு,
பட்டு லேஞ்சி தலையில்கெட்டி,
சோமன் துப்பட்டா மேலே
[போட்டு,
சுங்குல் உருமா தானும் கெட்டி,[35]
சிங்கம் பட்டிக்குப் புறப்படுவார்.

## தடையும் மீறலும்

'போய் வாரேன்,' என்று சொன்னார்.
இராமுத்தேவர் சொல்லுகின்றார்:
'போக வேண்டாம்! போக வேண்டாம்!
புத்தியுள்ள அத்தானே!
எண்ணைத் தடையாய் இருக்கு!
போகவேண்டாம் புத்திமானே'[36]
அண்ணன்மார்கள் தம்பிமாரு
என்று சொன்னார், 'போக வேண்டாம்!'
எல்லா பேர்களும் தான் தடுத்தார்.
தடுத்ததைக் கேட்டுக் கொண்டு,
அழகு பிள்ளை ஈனமுத்து
சொல்லுகின்றார் வாய் தொறந்து;—
'எத்தனையும் சொன்னாலும்
போகாமல் இருக்க மாட்டேன் நான்
'இச்சணமே நானும் போணும்.
என் உயிரே போனாலும் இருக்க மாட்டேன்.
'இச்சணமே போக வேணும்.'
சொன்ன சொல்லைத் தட்டிப் போட்டு,
புறப்படுகிறார் வீரப்புலி.

## ஆசையால் வந்த விளைவு

வள்ளியூர் தனைக்கடந்து;
வடக்கு வள்ளியூர் பாதை கூடி;
ஏர்வாடி[37] பாதை கூடி;
உடன்காட்டு[38] பாதை கூடி;
வடிவச்சி மலை[39] விலக்கு மிட்டு;
ஊச்சி குளம்[40] பாதை கூடி;
போனாரே காட்டுப் பாதை.
கோட்டைக் கரை[41] விலக்கு மிட்டு;
உப்பாத்துப் பாதை[42] கூடி;
பச்சையாறு நொச்சி குளம்
பய்ப்ப நேரி[43] பாதை கூடி;
பொழவக்கல்லு பாதை கூடி;
சேழைய பட்டர் மடமும்[44] விட்டு;
திரவியப் பொத்தை[45] பாதை கூடி;
கொப்பற தோப்பதிலே—
வீரப்புலி ஈனமுத்தை,
கூடரெண்டு பேருமாக
மலையாம வாறண்டு வந்து,
சேவிக்கும் மூணுபேரும்,
காவல் காரரும் கண்டு வளைந்து—

## தந்திரமாய்ப் பிடித்தார்கள்

கொப்பறை தோப்பதிலே—
கிழக்குமுகமாய் இருக்கும்போது,
வெத்திலை போடும்போது,
சண்டாள சேவுகரும்
தந்திரமாய் வளைந்து,
பொறத்தை நின்று பதிபோட்டுப் பிடித்தார்.
கவுலாகக்[46] கண்டு பிடித்தார்,
புடித்தவுடன் ஈனமுத்தை,
மொழியோட மொழியெடுத்து,
மூணு கெட்டாக் கெட்டினானே.
கெட்டி நல்ல கொண்டு போறாரே.
பாச்சகயிறு போட்டு புடித்துக் கொண்டு,
வீரப்புலி முன்னுமாகப் போறாராம்.
சேவுகர் பாச்சகயிறு போட்டு கொண்டு போறார்.
முன்னும் பின்னுமாகப் போறார்கள்.

## தவறுக்கு வருந்தல்

அப்போது ஈனமுத்து
வாய்தொறந்து சொல்லுவாராம்:
'வீடுவிட்டு வரும்போது
நிலைப்படிதலையில் தட்டுயது;
அதையும் பாராமல் பாவி,
அறியாமல் வந்தேனே!
முத்தத்தில் வரும் போது,
வலது பெருவிரல் தட்டிமாம்.
வீடுவெட்டு வெளியேறி போகயிலே—

வீச்சுளி கத்தினதாம்.
ஓரடி வைத்து ஈரடிவைக்கயிலே—
காகமும் இடமாச்சே.
ஈரடிவைத்து வரும்போது அங்கே
கருடனும் வலமாச்சே.
ஊருக்குள் இந்தச் சமனம்
வந்ததும் என்ன விதியோ?
அதையும் விட்டு மேக்க வரும் போது
பாப்பானும் எதிரே வந்தான்.
போகக் கூடாது என
மறித்தார்கள் எல்லோரும்.
அந்தச் சொல்லையும் கேளாமல்
இப்படி மன வருத்தப்பட்டுக் கொண்டு
என்ன செய்வேம்? ஏது செய்வேம்?
ஒருத்தரை நானடித்தேன்
அதுக்கு என்னை அடிக்கிறானே!
தந்திரமாய் வந்து என்னையும் பிடித்து
தொந்தரவு செய்கிறானே!
நேரடியா என்னைவந்து பிடித்தாக்கால்—
இரு துண்டா போட்டிடுவேன்.
அவன் வந்ததும் எனக்கு
லேசா தெரிந்தாக்கால்—
கிட்டத்தில் வருவானோ?
இவனிடத்தில் அம்புடும்படியா
ஊழ்வினைப் பயமோ?
'ஆறுக்கு இருந்தாலும் சாக வேணும்!'
நூறுக்கு இருந்தாலும் போக வேணும்'
மனதை நல்ல தேத்திக் கொண்டு,
அழகு பிள்ளை ஈனமுத்து,
'என்கூட வாருங்கள்,' என்று
போறாரே வேகமதாய்.

### பணகுடியில் சிறை

கொப்பற தோப்பும் விட்டு;
சேழையர் பட்டர் மடமும் விட்டு;
பொழவக்கல்லு பாதை கூடி;
பச்சையாறு தலமும் விட்டு;
கருவலங் குளம்[44] பாதை கூடி;
களக்காடு விலக்கு மிட்டு;
கொச்சி பொத்தை பாதைகூடி;
திருக்குறுங்குடி ஊரும் விட்டு;
வள்ளியூரான் காலும் விட்டு;
நரிப்பாறை பாதை[48] கூடி;
பணகுடி[49] தானும் வந்து;
இராமலிங்கர் ஈசர் வாசல்
போனார்கள் எல்லோரும்.
கோவில் கதவைத் தான்துறந்து,
உள்ளே தள்ளி அடைத்துப் போட்டு[50]
வாசல்படியில் தலையை வைத்து,
படுத்துக் கொண்டார்கள்.

### விலங்கொடித்த பறவை

வேளை நல்ல வேளையிலே
இருட்டு அத்த சாமத்திலே
வீரப்புலி ஈனமுத்து
உறக்க சமயம் பாத்து,
வல்லமையில் கெட்டிக்காரன்
கெட்டை நிமித்துக்கொண்டு,
குதிரை முழை கூடாரமுள்ளை
கக்கத்திலே இடுக்கிக்கொண்டு,
மதிலேறி குனிந்துகொண்டு,
முன்பாக வந்து நின்றான்.
சொல்லுகிறான் வாய் தொறந்து:
'போறேண்டா புள்ளிகளே,'
என்று சொல்லவும் ஈனமுத்து—
சேவுகன் திடுக்கென்று
சேவிகனும் சொல்லுவானும்:
'கட்டின கட்டையெல்லாம்
எவர்கள் அவுத்தார்கள்:
என்னமோசம் தெரியலியே!
என்று சொல்லி சேவுகரும்—
பிடிக்க வேணுமென்று
ஓடினான் சேவகனும்.
ஓடியங்கே மறிக்கும் போது,
சுத்தவீரன் ஈனமுத்து

கக்கத்திலே இடுக்கி இருந்தமுளை
முகத்திலே தானெறிந்தான்.
எறியும் அந்த சமயத்திலே—
முன்யெட்டி மறிக்கும் போது,
முளைய கொண்டு தானெறிந்தான்.
எறிந்து கீழே தள்ளிப்போட்டு,
திரட்டி அவனை அடித்தான்.
அடித்த அடி பொறுக்காமல்
பல்லுகளும் தான் உடைத்து,
சுத்தவீரன் ஈனமுத்து
இங்கே நிக்கக் கூடாதென்று,
அத்தராத்திரி வேளையிலே,
பணகுடி தலமும் விட்டு;
பொன்னிமேடு பாதைகூடி;
பாலத்து ஓடையும் விட்டு;
அத்தராத்திரி வேளையிலே—
வள்ளியூரு தானும் வந்தார்.

**வள்ளியூரில் திட்டமிடல்**

சுப்பிரமணிய கோனார் வீட்டில்
போய் இருந்தான் ஈனமுத்து.
சுப்பிரமணிய கோனார்தான் கேக்கார்:
'எங்கேயிருந்து எங்க வந்தீர்?
அத்தராத்திரி சாமத்திலே,
மன்னருடே ஈனமுத்து!'
அன்று சொன்னார் ஈனமுத்து:
அத்தராத்திரி வேளையிலே
இராமதேவரை வரவழைத்தார்.
அய்யம்பெருமாள் தேவரை வரவழைத்து,
வந்தார்கள் கோனார் வீட்டில்.
'என்ன செய்தி? என்ன காரியம்?'
என்று விசாரித்தார் ரெண்டு பேரும்.
உத்தபிள்ளை ஈனமுத்து
உத்தகாரியம் சொல்லுவானும்,
நடந்ததெல்லாம் சொல்லுவானும்.
கேட்டு முடித்தவுடன் பதில்
சொல்லுகின்றார் ரெண்டு பேரும்:
நான்,
போகவேண்டாம் போகவேண்டாம்,
சொன்ன சொல்லை கேளாமல்!'
அவரைக்கட்டி இவர் அழுதார்;
இவரைக் கட்டி அவர் அழுதார்!
அப்படி இருக்கின்ற வேளையிலே -
அழகு பிள்ளை ஈனமுத்து,
'இச்சணமே தானுமென்னை
இவ்விடம்விட்டு கடத்தவேணும்.
மறுகால் குறிச்சியிலே—
பிச்சகண்ணு தேவர் வீட்டில்
இச்சணமே கொண்டு போய்
இருபேரும் விட வேணும்!'
ஆணழகன் சொன்னபோது-
ஆமென்று சம்மதித்து,
அச்சணமே புறப்படுவார்.

**மறுகால் குறிச்சிக்குப் பயணம்**

மூணுபேரும் ஒண்ணாக
வள்ளியூர் தலமும் விட்டு;
மங்கம்மாள் சாலை[51] வழி—
போறார்கள் மூணு பேரும்.
கணியான் பாறை[52] பாதைகூடி,
போறார்கள் ரோட்டு பாதை.
கணவதி அடப்பு[53] வழி
வடக்கு வள்ளியூர் தலமும்விட்டு;
அய்வருசா கோட்டை[54] விட்டு;
மூன்றுயொகம் கொண்டாளை[55]
சேர்வை செய்து;
கண்ணுப்புளி[56] பாதை கூடி!
போறார்கள் மூணு பேரும்.
பெருமளைஞ்சி[57] தானும் விட்டு;
நாட்டாறு தனைக்[58] கடந்து;
வாவிகுளம்[59] தன்னை விட்டு;
வெள்ளமடம்[60] பாதை கூடி:
நாங்குநேரி[61] தலமும் விட்டு:
மறுகால் குறிச்சி[62] தானும் வந்தார்.
பிச்சகண்ணு தேவர் வீட்டில்
போறார்கள் மூணுபேரும்.
சாப்பிட்டு இளைப்பாறி,

வெற்றிலைத் தாம்பூலம் போட்டுக் கொண்டு,
இராமுத்தேவரும் அய்யம் பெருமாள் தேவரும்
தெக்கு நோக்கிப் புறப்பட்டார்கள்.
வரும்போது சொன்னார்கள்,
'இந்த வீட்டைவிட்டு போகாதே'
யென்று சொன்னார்கள் ரெண்டு பேரும்.
ஆம்யென்று சம்மதித்தார்,
உத்தபிள்ளை ஈனமுத்து.
இராமுத் தேவரும் அய்யம் பெருமாள் தேவரும்
தெக்கு வள்ளியூர் தானும் வந்தார்.

### ஆபத்தின் அழைப்பு

பித்தா நாள் காலத்திலே—
சாப்பிட்டு இளைப்பாறி
அழகு பிள்ளை ஈனமுத்து,
'சிங்கம்பட்டி போய் வாரேன்
இச்சணமே போகவேணும்!
உயிர் போனாலும் அங்கே போணும்!
தடையில்லாமல் போகவேணும்!'
என்று சொன்னார் ஈனமுத்து.
பிச்சகண்ணுத் தேவரும்
வாய் துறந்து சொல்லுகின்றார்:
'அவர் சொன்னதெல்லாம் கேட்டுக்கொண்டு,
இப்பம் போகவேண்டாம்! போகவேண்டாம்!
சுத்த வீரன் ஈனமுத்து,
சொன்ன மொழி கேளாத
சுத்தவீரன் ஈனமுத்து,
மந்திரத்தில் பெரியவனும் ஈனமுத்து,
தந்திரத்தில் பெரியவனும்
சமத்து நல்ல ஈனமுத்து,
கிருபையுடன் தானும் பாத்து—
சமத்து நல்ல கெட்டிக்காரன்
தனக்கு வாரது அறியாமல்—
சொன்ன சொல்லு கேளாமல்—
அழகு பிள்ளை ஈனமுத்து,
போகவேண்டாம் என்றுசொல்ல
போணுமென்று சொல்லலாமோ?'
என்று கேட்டாரே பிச்சகண்ணு தேவர்.
சண்டாளன் ஈனமுத்து
தனக்கு வாரது அறியாமல்,
சொன்ன சொல்லை தடுத்துப் போட்டு.
போகவேணும் என்று சொல்லி,
புறப்பட்டார் ஈனமுத்து.

### பாப்பான் குளத்தில் தங்கல்

சொன்னசொல் கேளாத
குடிகெடுத்த ஈனமுத்து,
வழிஅனுப்பித்தி புறப்பட்டாராம்.
மறுகால் குறிச்சி தலமும் விட்டு;
வாய்த்த இடகாடு விட்டு;
பொத்த சித்தி[63] பாதை கூடி,
தேவநல்லூர்[64] விலக்கும் விட்டு;
பச்சையாறு பாதை கூடி,
பொழவகல்லு பாதை கூடி;
சேமையர் பட்டர் மடம் கடந்து;
கொப்பரை தோப்பும் விட்டு;
பாப்பான் குளம்[65] தானும் வந்து,
பூதத் தேவர் வீட்டில் வந்தார்.
அழகுபிள்ளை ஈனமுத்து
தானிருக்கும் வேளையிலே—

### பூதத்தேவரின் தூது

பாரப்பிள்ளை ஈனமுத்து
சூது எண்ணாமல் தான் இருந்தார்.
பூதத்தேவரும் அத்தராத்திரி வேளையிலே—
உள்ளோலை தான் எழுதி,
அத்தராத்திரி சாமத்திலே—
சிங்கம்பட்டிக்கு ஆள் அனுப்ப,
ஓலையை வாங்கிப் பாத்துக் கொண்டு.
அத்த ராத்திரி வேளையிலே—
அரமனையில்

செவலக் குதிரைக்குச் சீனி [வைத்து,
பெரியசாமி துரையுமங்கே
வாசப்பிரதானியை வரவழைத்து,
படைகளை வரவழைத்து வரச் [சொல்ல,
படைகளும் தானும் வந்து,
கத்திக் கேடயம் கையில்எடுத்து,
ஈட்டிவேல்கள் தானெடுத்து,
ஐநூறு படையுமாக,
சிங்கம்பட்டி ஊரும் விட்டு,
வாரார்கள் துரையவர்கள்.
அத்தராத்திரி வேளையிலே,
ஆரவாரமாக வாரார்கள்.
படைகள் எல்லாம் ஒன்றாய்க்கூடி,
பாப்பான் குளம் தானும் வந்து,
பூதத்தேவர் வீட்டைசுத்தி வளைத் [தார்.
வளையும் அந்த வேளையிலே—

### தப்பும் முயற்சி

மன்னன் நல்லோ ஈனமுத்து,
ஆட்களை கண்டவுடன்
மச்சிமேல் ஏறியல்லோ
சுத்தவீரன் ஈனமுத்து,
பாய்ந்தானே ஈனமுத்து.
பாய்ந்ததைக் கண்டார்கள்.
பிடிக்கிறதுக்கு ஓடிப் போனார்.
சண்டாளன் ஈனமுத்து
பாய்கிறானே புலிப்பாய்ச்சல்.
மன்னன் நல்ல ஈனமுத்து
ஓடியந்த வேளையிலே—
ஈழுவன் ஊத்த[66]திலே
அத்தராத்திரி வேளையிலே
அழகு பிள்ளை ஈனமுத்து,
அத்தராத்திரி சாமத்திலே
ஈழுவன் ஊத்தத்திலே
ஓடியந்த வேளையிலே
ஊத்தில் இருந்தானும்.
சண்டாள அரண்மனையார்
ஈழுவன் ஊத்தத்திலே;
சுத்தி வளைத்தாராம்.
செல்லப்பிள்ளை ஈனமுத்து—
அழகு பிள்ளை ஈனமுத்து—
தண்ணிக்குள்ளே முங்கியிருக் [கான்.
பத்தோட பத்து நாழியல்
முங்கியிருந்தான் தண்ணியிலே.
மூச்சி முட்டி வெளியில் வந்தான்!
போய்புடித்தார்கள் அரமனயார்.
அம்புட்டுக் கொண்டானே [ஈனமுத்து!

### பிடிபட்டது சிங்கம்

'என்ன செய்வேம்? ஏது செய் [வேம்?'
என்று சொல்லியல்லோ ஈன [முத்து
மொழியோட மொழியெடுத்து,
கட்டினார்கள் மூணு கட்டா,
ஈழுவன் ஊத்தைவிட்டு,
புறப்படுவார் சாமத்திலே;
குடிகெடுத்த ஈனமுத்தை
கொண்டு போனார் சிங்கம்பட்டி.
ஈழுவன் ஊத்தும் விட்டு,
கழுத்தறுத்தான்[67] பாறைவிட்டு;
வாய்த்த இடகாடு விட்டு;
சிங்கப்பட்டி சேர்ந்தார்கள்.
அரமனயில் கொண்டு போய்
ஆணழகன் ஈனமுத்தை;
கோட்டைக்குள் கொண்டுபோய்
நாலுவாயிலையும் தானடைத்து;
ஆனைக்கண்டால் ஆனழகன்
அழகு பிள்ளை ஈனமுத்தை,
கருமரத்திலே இரும்படித்து,
கட்டழகன் ஈனமுத்தை
சுத்தவீரன் ஈனமுத்தை
சண்டாள துரையவர்கள்
வாய் தொறந்து சொல்லுகின்றார்.
பாவிமகன் ஈனமுத்தை
கொண்டைக்கு முளையறைந்து,
கொண்டையைக் கெட்டினார்கள்.
கைக்கு முளையறைந்து,
கையிரெண்டு கட்டினார்கள்.
காலுக்கு முளையறைந்து,

காலுரெண்டும் கட்டினார்கள்.
மலத்தி கிடத்தியல்லோ
மன்னனுட ஈனமுத்தை,
நெய்யை நல்ல கொண்டுவந்து,
நெய்ப்பாளம் தான் நனைத்து,
தலைக்குப் பத்துப்பேரும்
காலுக்குப் பத்துப்பேரும்
சுத்தவீரன் ஈனமுத்தை, (810)
நெய்யை நல்ல கொண்டு வந்து,
நெய்ப்பாளம் போட்டார்கள்.
ஏழ் அடுக்குப் பாளம்சுத்தி,
நெருப்பைப் போட்டு எரித்தார் [கள்.
பாவி நெருப்பதில் போட்டவுடன்
புழுவாத் துடிக்கிருப்போல
துள்ளி உழுதாரே.

நீருகி நீரில் கலந்தான்
துடிக்கிறது ஆவியெல்லாம்
வாணாள் மருகுதே,
குடிகெடுத்த சண்டாளியால்.(82
சாம்பல்தான் எடுத்து
தாம்பிர வன்னியில் போட்டெறிந் [தார்.
தாம்பிர வன்னியில் தான்கரைந்து
சண்டாளன் ஈனமுத்து
பேயாய் விளங்கியல்லோ
பேர் பெரிய ஈனமுத்து.* (826)

* இக்கதைப்பாட்டு முடிவின்றியிருப்பதை நோக்கின், இது மேலும் சில பகுதிகளைக் கொண்டிருக்குமோ என்றும் ஐயம் தோன்றுகிறது. கதைமாந்தர் வாழ்த்தோ, கதைகேட்போர் பெறும் பயன்களும், வாழ்த்துமோ இதில் காணப்படவில்லை. இறுதியில் பின்வரும் குறிப்புகள் காணப்படுகின்றன :

"1007-ஆம் ஆண்டு தைமாதம் பட்டது. 32 வயது பரணம் புறந்தது 975. ஈனமுத்து சாமி வாழ்த்து."

# விளக்கக் குறிப்புகள்

1. முகனை - சிறப்பு.
2. மதாந்தசேர்வை : ஒவ்வொரு மாத இறுதி வெள்ளிக்கிழமையிலும் முருகன் கோவிலை வணங்கிவரல். தொடர்ந்தாற்போல் 10 அல்லது 12 மாத பந்தம் செல்வர்.
4. வசி - வரம்.
4. வழிபாட்டு முறைகளுள் ஒன்று.
5. பிள்ளை பிறந்தால் பொன் போடுவதாக வேண்டுவதும். செலுத்துவதும் உண்டு.
6. சிலு - துன்பம், ஒழுங்கின்மை.
7. ஆறில் ஒன்று கடமை வாங்குவது தொன்றுதொட்ட வழக்கம்.
8. சவிக்கை காவல் - சுங்கச் சாவடி காவல்.
9. 15 இடப்பெயர்களும் - ஊர்ப் பெயர்களும்.
16. அத்தாளம் - யானை, இரவு.
17. பித்தாநாள் - மறுநாள்.
18. 20 ஊர்ப் பெயர்கள்.
21. விருந்தை உபசரிக்கும் முறை.
22 - 23. ஊர்ப்பெயர்கள்.
24. பழமொழி.
25. ஊர்ப்பெயர்.
26. பண்ணைபாட்டம் - குத்தகை.
27. முக்கு - மூலை.
28. டேசன் - Station.
29. மதிப்பும் மரியாதையும் ஜமீன்தாருக்கு; அதிகாரம் ஈனமுத்துக்கு.
30. சத்தியத்தின் வகைகள். திருவிளக்கு, உப்பு, பால், வெடி, வேல்கத்தி போன்றவை மனிதனின் - தேவையான - உயர்வானப் பொருள்கள். அதன் மேல் ஆணையிட்டால் பின் மாறமாட்டார்கள் என்பது நம்பிக்கை.
31. சண்டை சல்லியம் - சண்டையும் கலவரமும்; உபத்திரவம்.
32. வீரகோகாரரெல்லாம் - வீண் பழிக் கூறுபவர்கள்.
33. சாடிசொல்லல் - குறிப்பினல் குற்றம் சொல்லல்; கோள், கண்டித்தல்.
34. விருந்தின் நிலை.
35. அலங்கார நிலை.
36. எண்ணெய்த்தடையுண்டு என்பது நாட்டுப்புறத்து நம்பிக்கை.
37 - 45. ஊர்ப்பெயர்களும் இடப் பெயர்களும்.
46. கவுலாக - சூழ்ச்சியாக.
47 - 49. ஊர்ப்பெயர்கள்.
50. கோவில்களும் சிறையாக அன்று விளங்கின என அறிகிறோம்.
51 - 53. ஊர்ப்பெயர்களும் இடப் பெயர்களும்.
54. ஐவராசா கோட்டை : வள்ளியூரில் குலசேகரன் கட்டிய கோட்டை.
55. கோட்டையில் உள்ள அம்மன் தெய்வம்.
56 - 67. ஊர்ப்பெயர்களும் இடப் பெயர்களும்.

# சிறப்புப் பெயர் அகராதி


அத்தாளநல்லூர் 258, 320, 313.
அம்பலவாணபுரம் 116, 173, 186, 226, 247, 250.
அய்யம்பெருமாள்தேவர் 619, 666.
அய்வராசா கோட்டை 651.
ஆடு 206.
ஆரல்வாய்மொழி 199, 205
ஆறு 38, 52, 55, 63, 112, 547.
ஆனை 183.
இரண்டு 34, 59, 317, 454, 639.
இராமலிங்க ஈசர் 564.
இராமுத்தேவர் 436, 460, 618, 666, 613.
இருவத்தொரு 441.
ஈட்டி 183, 734.
ஈழுவன் ஊத்து 756, 760, 764, 778.
ஈனமுத்து 23, 56, 78, 81, 89, 94, 98, 103, 109, 155, 161, 166, 209, 212, 216, 220, 233, 236, 240, 245, 249, 280, 284, 287, 291, 295, 296, 299, 305, 315, 318, 324, 329, 335, 338, 351, 360, 363, 367, 387, 392, 396, 400, 404, 406, 409, 416, 451, 469, 493, 505, 513, 550, 572, 582, 592, 602, 611, 615, 616, 623, 634, 672, 677, 682, 687, 689, 690, 692, 697, 701, 705, 707, 719, 721, 745, 748, 749, 752, 754, 758, 766, 767, 775, 777, 780, 787, 791, 793, 794, 797, 805, 810, 824, 826.
உப்பாத்து பாதை 486.
உப்பு 348.
ஊச்சிகுளம் 483.
எட்டு 40, 67, 268, 297.
ஏழு 40, 65.
ஏர்வாடி 480.
ஐந்து 38, 63.
ஐநூறு 736.
ஒன்பது 42, 69.
ஒன்று 34, 55, 59, 112.
கண்ணுப்புழிப் பாதை 654.
கணவதி அடைப்பு 645.
கணியான் பாறை 647.
கத்தி 135, 182, 191, 345, 734.
கம்பளி 343.
கரிப்பி 7, 102.
கருடன் 526.
கருவலங்குளம் 557.
கழுத்தறுத்தான் பாறை 782.
கள்ளவெண்ணி 259, 263, 274, 303, 306, 308, 313, 320.
களக்காடு 144, 424, 558.
கன்னியாகுமரி 171.
காகம் 524
கிழக்கு 499.
குதிரை 132, 293.
குதிரை முழை 576.
கேடயம் 135, 182, 734.
கொப்பறை தோப்பு 142, 421, 492 498, 553, 716
கொச்சிபொத்தை 145, 425, 559.
கோட்டைக்கரை 485.
கோழிக்கறி 443, 446.
சங்கர உடைய அம்மாள் 256, 260, 270, 277, 354.
சங்கர உடையார் 255.
சம்பங்கி எண்ணை 153.
சிங்கம்பட்டி 110, 232, 333, 419, 458, 678, 726, 737, 781, 785.
சிவனணைஞ்ச பெருமாள் 111, 129, 138, 165, 187, 231.
சுங்குல் உருமால் 457.
சுப்பிரமணிய கோனர் 612, 673.

சுப்பிரமணியர் 4, 9, 19, 24, 54, 432.
சூட்டு பொத்தை 4, 29.
சூட்டு மலைப் பொத்தை 147.
சேழையபட்டர் மடம் 490, 554, 715.
சோமன் துப்பட்டா 456.
தங்கம் 45.
தாடகத்தி அம்மன் 28.
தாம்பிர வன்னி 822, 823.
திரவிய பொத்தை 451.
திருக்குறுங்குடி 146, 426, 560.
திருமலை நம்பி 428.
திருமலைப்பாறை 431.
திருவிளக்கு 348.
தெக்கு 667.
தெக்கு வள்ளியூர் 2, 151, 435, 478, 474.
தேவநல்லூர் 712.
தேள் 1, 150, 434.
நரிப்பாறை 562;
நாங்குநேரி 660
நாட்டாறு 657.
நான்கு 34, 61.
நாராயணத் தேவர் 4, 180.
நூறு 548.
நெய் 806. 811.
நெய்ப்பாளம் 807, 812.
நொச்சிகுளம் 487.
பச்சையாறு 473, 477, 556, 713.
பசைபதி 165.
பட்டுலேஞ்சி 455.
பணகுடி 563, 605.
பனிரெண்டு 75.
பத்து 44, 71, 779, 808, 809.
பதிநான்கு 88.
பதிமூன்று 77.
பதிறு 108.
பதினொன்று 73.
பய்ப்பநேரி 448.
பாப்பான் 530
பாப்பான் குளம் 617, 742.
பாரதம் 72.
பாளையக்காரர் 140.
பிச்சகண்ணுத் தேவர் 638, 662, 683, 700.
பிரமதேவன் 340.
புலி 62, 81, 90 - 93, 198, 159, 245, 315, 477, 493, 753.
புளவகல்லு 143, 422, 489, 555, 714.
பூதத்தேவர் 718, 723, 743.
பெரியசாமித் துரை 283, 334, 256, 259, 368, 385, 391, 407, 730.
பெருமணஞ்சி 659.
பொத்திசித்தி 711.
பொன்பாண்டித் தேவர் 193.
பொன்னி மேடு 606.
மங்கம்மாள் சாலை 645.
மதயானை 219.
மறுகால் குறிச்சி 637, 661, 709.
முத்து இருளப்பத் தேவர் 117, 121, 125, 248.
முப்பந்தல் 199, 199, 224.
மூன்று 36, 61, 436, 507, 643, 646, 655, 663, 777.
மூன்று யொகம் கொண்டாள் 652.
வடக்கு 264.
வடக்கு வள்ளியூர் 148, 163, 430, 479, 650.
வடிவச்சி மலை 482.
வள்ளியூர் 509, 644.
வள்ளியூரான் கால் 561.
வாவகுளம் 658.
வீச்சருவாள் 184.
வீச்சுளி 522.
வீரப்புலி 510, 572.
வெத்திலை 500.
வெள்ளமடம் 659.
வேல் 183, 349, 735.

# வரலாற்றுக் குறிப்புகள்

## 1. சிங்கம்பட்டி ஜமீன் வரலாறு

ஈனமுத்துப் பாண்டியன் கதையில் நாம் பல வரலாற்றுக் குறிப்பு களைக் காணமுடிகின்றது. ஈனமுத்துப் பாண்டியன் பிறந்த தெற்கு வள்ளியூர் வரலாற்றுச் சிறப்பைப் பெருவிட்டாலும் அவன் சிறப்புடன் வாழ்ந்த சிங்கம்பட்டி, வரலாற்றுச் சிறப்புப் பெற்றதே. அந்தச் சிங்கம்பட்டியின் வரலாற்றை எச். ஆர். பேட் (H. R. Pate) தமது Madras district Gazetteer—Tinnevelly-யின் பாகம் ஒன்றில் பக்கம் 368-ல் சுருக்கமாகக் கூறுகிறார் :

1792-ல் கிழக்கிந்திய கம்பெனியானது பாளையப்பட்டுகளில் கலெக் டர்களை நியமித்துத் திறை வசூலிக்கும்போது, குப்பு ஐயங்கார் சிங்கம் பட்டிப் பாளையம் தமக்கு உரியது என்று உரிமை கொண்டாடினர். கம்பெனி இதை அனுமதிக்கவில்லை. 1738-ல் ஜாக்சன் துரை எஸ்டேட் தொடர்பான செய்திகளை யெல்லாம் ஆய்ந்து முன்பு அளந்து அமைத்த வரியைவிட எட்டு மடங்கு அதிகமாக விதித்தார். ஜமீன்தார், புதிய வரையறைகளுக்குச் சம்மதித்து தமது எஸ்டேட்டை கலெக்டரிடம் சமர்ப்பித்தார். லூசிங்டன் துரை, பதவிக்கு வந்தபோது அவரது கைகளில் எஸ்டேட் இருந்தது. ஜாக்சன் துரையால் விதிக்கப்பட்ட வரித்தொகை நியாயமானதே என அறிந்து 1807-ல் அதற்கென்று தனிக்குழு அமைக்கப்பட்டதால் அத் தொகையும் உறுதி செய்யப் பட்டது.

ஐந்து ஆண்டுகள் கம்பெனியின் மேற்பார்வைக்குப் பிறகு நல்ல குட்டி தேவரின் கைக்கு எஸ்டேட் வந்தது. 1830-ல், திறைப் பாக்கிக் காக எஸ்டேட் ஜப்தி செய்யப்பட்டு, அந் நிலை 1832 வரை நீடிக்கப் பட்டது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பெரியசாமித் தேவர் மாண்டதும் எஸ்டேட்டுக்கு உரிமை கொண்டாடப் பலர் வந்தனர். எனவே, மீண்டும் கலெக்டரின் மேற்பார்வைக்கு எஸ்டேட் வந்தது. 1836-ல் எஸ்டேட்டை கலெக்டர், விதவையான ஜமீன்தார் மனைவிக்கே திருப்பிக் கொடுத்தார். திறை ஒழுங்காகச் செலுத்தப்படாததால் 1842-ல் மீண்டும் எஸ்டேட்டை ஜப்தி செய்து விட்டார் கலெக்டர்.

1845-ல் மீண்டும் சங்கரவடிவம்மாள் எஸ்டேட்டை வழக்காடித் திரும்பப் பெற்ருள். அதே ஆண்டில் அவள் இறந்தபோது, சொத்துரிமைக்காக விவாதம் வரவே, சொத்து கலெக்டரின் கைகளுக்குச் சென்றது. ஐந்து ஆண்டுகளாக அவரிடமே இருந்த பிறகு 1852-ல் பெரியசாமித்தேவரின் தாயார் சுடலைமுத்து அம்மாள் சொத்துகளைப் பெற்று 1856 வரை தன்னிடமே வைத்துக்கொண்டிருந்தாள். பின் அதை அவளது மகள்வழிப் பேரனை சிவசுப்பிரமணியத் தேவ கொடுத்தாள்.

சுப்பிரமணியத் தேவர் 1860-ல் மாண்டதும் அவரது மகன் சிறுவனைபடியால் சொத்துகளைக் கலெக்டரே மேற்பார்வை செய்தார். ஆறுமாதங்களுக்குப் பிறகு அப் பையனின் தாயாரே சொத்தின் பாதுகாவலரானர். அவள் 1867-ல் மாண்டபோது சொத்து நீதிமன்றத்துக்கு வந்தது. 1881-ல் இருந்த ஜமீன்தார் திறமை மிக்கவராய் இருந்ததால் சொத்தை மீண்டும் பெற்ருர்; நீர்ப்பாசன வசதிகளையும் பெற்ருர். 1893-ல் இவர் மாண்டதும் இவரது மகன் தென்னட்டுப்புலி நல்ல குட்டி சிவ சுப்பிரமணியத் தேவர் ஜமீன்தாரானர். இந்த அளவே சிங்கப்பட்டி ஜமீனின் வரலாற்றை அறிய முடிகிறது.

## 2. சிங்கம்பட்டி ஜமீன்தார் பற்றிய செய்திகள்

இதன் மூலம் நல்லகுட்டித் தேவர், பெரியசாமித் தேவர், சிவ சுப்பிரமணியத் தேவர் ஆகியோர் கி.பி. 1792 முதல் 1893-க்குப் பிறகும் ஜமீன்தாராய் ஆண்டிருக்கின்றனர்.

"சிங்கம்பட்டி ஆதிக்கத்தில்,
சிவனணைஞ்ச பெருமாள் துரை
ஆறு ஒன்றுடைமை வாங்கி,
அசையாத மணியும்கட்டி
ஆண்டிருக்கும் நாளையிலே" (110 - 114)

என்று கதைப்பாடல் கூறும் சிவனணைஞ்ச பெருமாள் யார்? எப்பொழுது ஆண்டார்? பெயர் என்ன? முத்து இருளப்பத்தேவர் மகன் தான் சிவசுப்பிரமணியத்தேவரா? என்ற ஐயங்கள் இருக்கும்போது— ஈனமுத்து கதையில் பெரியசாமித்துரை என்னும் பெயர் வருவதால் சிவனணைஞ்ச பெருமாளின் மறுபெயரே பெரியசாமித்துரை எனலாம்.

திரு. நா. வானமாமலை தமது 'முத்துப்பட்டன்' கதைப்பாடலில் நல்லகுட்டித் தேவர்தான் சிங்கம்பட்டியின் முதல் ஜமீன்தார் என்கிருர்.

அவருக்குப் பின்னர் பெரியசாமித் துரை ஆண்டார் என அறிகிறோம். இவர் மாண்டது 1834, அதாவது ஈனமுத்து மாண்டு இரண்டாண்டுகளுக்குப் பிறகே எனலாம்.

முத்துப்பட்டன் கதையில் பட்டன் இறந்ததும் அவன் மனைவியர் சிங்கம்பட்டி ஜமீன்தாரிடம் வந்து உடன்கட்டை ஏற உத்தரவு கேட்கின்றனர். அப்போது ஜமீன்தார் அவர்களைத் தம்மோடு அரண்மனையில் இருக்குமாறு—

"நித்தமொரு பட்டுடுத்தி
நினைத்தபடி பூமுடிந்து" (48)

வாழுமாறு சொல்ல, அவர்கள் அவரைக் கடிய, இறுதியில் ஜமீன்தார் உடன்கட்டையேற உத்தரவு தருகிறார். இந்த ஜமீன்தார் யார்? அப்போதுதான் சிங்கம்பட்டி ஜமீனே தோன்றவில்லையே? பின்னர், இக்குறிப்புக்குப் பொருளென்ன? இன்றும் பட்டவராயன் கோவில் விழாவில் கோமரத்தாடிகள் ஜமீன்தாரிடமிருந்து சக்கிலியரின் தாலியாகிய பாசிக்கொத்தை வாங்கிச்சென்று தீ மிதிக்கிறார்களே? இதன் பொருள் தான் என்ன? ஈனமுத்து கதையில் இதற்கும் விளக்கமில்லை. எனினும், இதன் மூலம் ஜமீனுக்கென்று சில சிறப்பு உரிமைகள் இருப்பதை அறிந்து கொள்கிறோம்.

## 3. சவிக்கைக் காவல்

"சவிக்கைகாவல் கட்டவேணும்" (124)

என்ற அடியால், மறவர்களுக்குத் தொழில் காவல்தான் என்பதையும், அதன் தொடர்பாகவே முத்து இருளப்பத் தேவருக்கும் மலையாளம் பொன்பாண்டித் தேவருக்கும் போர் நடந்தது என்பதையும் இப் பாட்டிலிருந்து அறியலாம்.

## 4. கோவில் சிறை

"கோவில் கதவை தான் துறந்து
உள்ளே தள்ளி அடைத்துப் போட்டு" (565 - 566)

என்னும் அடிகளால் கோவில்களும் சிறைகளாய்ப் பயன்பட்டன என்ற வரலாற்றுக் குறிப்பையும் அறிந்துகொள்ளலாம்.

## 5. தண்டனை முறை

"நெய்ப்பாளம் போட்டல்லவோ
நெருப்பெடுத்து சுட்டார்கள்"

என்னும் அடிகளால் அன்று ஜமீன்தார் கொடுத்த தண்டனை முறைகளை யும் அறிந்துகொள்ளுகிறோம்.

## 6. முப்பந்தல் போர்

"முப்பந்தல் வந்தார்கள்
சண்டைகள் செய்யலுற்றார்" (199 - 200)

என்ற அடிகளால் முப்பந்தல் போரைப் பற்றி அறிகிறோம். இது பற்றி வரலாற்று நூல்களில் குறிப்புகள் இல்லை. என்றாலும் இது ஒரு முக்கிய மான போர்தான். ஈனமுத்துவின் வாழ்வினில் ஏற்பட்ட திருப்பு முனை இங்கேதான் ஆரம்பமாகிறது.

'முப்பந்தல்' மலையிடை வெளியாகிய அறைவாயிலிலே அமைந்த ஆரல்வாய்மொழிக்கு ஒரு கல் தொலைவில் உள்ளது. இங்கே சேர, சோழ, பாண்டியர் என்னும் தமிழக முப்பெரு வேந்தரும் ஒருகால் ஒருங்குகூடி அளவளாவினராம். அவர்களும் பரிவாரங்களும் தங்குவ தற்காக மூன்று பெரும் பந்தல்கள் தனித்தனியாய் அமைக்கப் பட்டிருந் தனவாம். அதனை நினைவுகூரும் வகையில் மக்கள் அந்த இடத்தை 'முப்பந்தல்' என வழங்கினர் என்பது செவிவழிச் செய்தி.

இங்கே இப்பொழுது இசக்கியம்மன் கோயில் உள்ளது. நாகர் கோவில்—திருநெல்வேலி நெடுஞ்சாலை மருங்கில் திகழும் இக் கோயி லைக் கடந்து செல்வோர், இதனை வணங்கி வழிபட்டுக் காணிக்கை செலுத்துகின்றனர். இவ் வழிச் செல்லும் பேருந்து வண்டிகள் முதலி யனவும் கோயிலின் முன், மக்கள் வணங்கிக் காணக்கை செலுத்தும் பொருட்டு நிறுத்தப்படுகின்றன.

முப்பந்தல் அன்றைய மலையாளத்தின் எல்லை; இன்றோ கன் னியாகுமரி மாவட்டத்தின் எல்லை; புகுமுக வாயில். எல்லைக்காவல் தெய்வமாய் இலங்குகிறாள் இசக்கியம்மன்.